# "ஈ.பி.ஆர்.எல்.எவ். நிர்வாகத்தின் ஈழப்பிரகடனம் பொறுப்பற்ற செயலாகும்" - புலிகள் கண்டனம்

(கொழும்பு)

ஈ. பி. ஆர். எல். எவ். நிர்வாகத்தினரால் செய்யப்பட்ட சுதந்திரப் பிரகடனம் மோசடியானதும், நகைப்பிற்கிடமானதும் பொறுப்பற்றதுமான செயலாகும் என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கண்டனம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமை அலுவலகத்திலிருந்து நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; இச் சுதந்திர பிரகடனம் சட்டப்படியான குறிக்கோளை அடைவதற்கு மக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்

(8ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 மாசி: 23 ஷஃபான் பிறை: 9 இதழ்: 22

யாழ்ப்பாணம் புதன்கிழமை 07-03-1990

## கொழும்பிலிருந்து வந்த 3 தனியார் பஸ்களில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்த மூன்று தனியார் பஸ் வண்டிகள் பூனைவையில் வைத்துக் கொள்ளை யடிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

கொள்ளையில் ஈடுபட்ட கொள்ளையர்சள், பிரயாணிகளுக்கு எவ்வித தொந்தரவும் கொடுக்காமல் அவர்களிடமிருந்த பணம், நகைகள் முழுவதும் கொள்ளையடித்தார்கள் என்று கூறப்படுகின்றது.

காதில் அணிந்திருந்த காதுக்குச்சிகூடக் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது என்று பஸ் உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார். (ம-56)

# சுதந்திர ஈழக் கோரிக்கையை வரதர் கைவிட வேண்டுமென இந்திய தூதுவர் வேண்டுகோள்!

[கொழும்பு]

**வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் ஒரு தலைப்பட்சமாகப் பிரகடனப்படுத்திய ஈழ சுதந்திரக் கோரிக்கையைக் கைவிடவேண்டுமென்று இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு. எல்.எம். மஹ்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.**

'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' என்ற பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

திரு, மஹ்ஹோத்திரா இப் பேட்டியில் மேலும் கூறியதாவது;

"இந்த சுதந்திரக்கோரிக்கையை வாபஸ் பெற்று அமைதியை நிலை நாட்டுவதற்கு திரு. வரதராஜப்பெருமாள் பாடுபட வேண்டும்.

1987-ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்ததின்படி வடக்கு, கிழக்கில் அமைக்கப்பட்ட ஜனநாயக அமைப்புகளை வலுப்படுத்துதற்கு முதல்

(8ம் பக்கம் பார்க்க)

## பயிலுநர் ஆசிரியர் மேன்முறையீடு புதிய திகதி

(யாழ்ப்பாணம்)

பயிலுநர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தெரிவு செய்யப்படாத விண்ணப்பதாரிகள் மேன்முறையீட்டு விசாரணை சம்பந்தமான திகதியை கல்வித்திணைக்கள அதிகாரிகள் நேற்றுமாலை மீண்டும் மாற்றியுள்ளனர்.

அவர்களால் முன்னர் எமக்கு வழங்கப்பட்ட விசாரணை பற்றிய திகதிகளின் விபரங்கள் ஏழாம் பக்கத்தில் வெளிவந்துள்ளன. பிந்திக் கிடைத்த தகவல்களின்படி அது தவறானதாகும்.

புதிய நேரசூசிப்படி இன்று (புதன்கிழமை) கரவெட்டி, பருத்தித்துறை விண்ணப்பதாரிகளுக்கென விசாரணை நடைபெறும். நாளை எட்டாந் திகதி சண்டிலிப்பாய், ஒன்பதாம் திகதி சங்கானை, தெல்

(8-ம் பக்கம் பார்க்க)

## இரு முக்கிய அதிகாரிகள் பாதுகாப்புத் தேடி இந்தியா செல்ல ஆயத்தம்

(திருமலை)

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முக்கிய இரண்டு உயர் அதிகாரிகளும் அவர்களது குடும்பத்தவர்களும் பாதுகாப்புத் தேடி விரைவில் இந்தியா பயணமாகவிருப்பதாகவும், இவர்களுக்கு இந்தப் பயணத்தில் அதிமுக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இந்தியப் படையினர் இலங்கையிலிருந்து முற்றாக வெளி

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ எல்லைக்குள் பிரவேசிக்க எனக்கு சுங்கப் பரிசோதனை அவசியமில்லை! - ரஞ்சன்

(கொழும்பு)

நான் தமிழீழ எல்லைகளுக்குள் பிரவேசிக்க சுங்கப்பரிசோதனைக்கு உட்படத்தேவையில்லை. எனது சுற்றுப்பயணத்தின் போது பொதிகள் எதனையும் தூக்கிச் செல்லாத காரணத்தினால் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் பிரகடனம் செய்துள்ள 'தமிழீழ அரசின்' எல்லைக்குள் பிரவேசிக்கும் போது நான் சுங்க பரிசோதனைக்கு உட்படத்தேவையில்லை".

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும் பாதுகாப்பு

(8-ம் பக்கம் பார்க்க)

## பனங்கட்டி உற்பத்தியை ஊக்குவிக்க கருப்பணி விலை 1 ரூபாவால் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபை பனங்கட்டி உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகக் கருப்பணியின் கொள்விலையைப் போத்தலுக்கு ஒரு ரூபாவால் அதிகரித்துள்ளது.

இது கள்ளின் விலையிலும் ஒரு ரூபா கூடியதாகும். குடிசைக் கைத்தொழில் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கவும், நாட்டின் தேவையை ஈடுசெய்யப் போதுமான பனங்கட்டியை உற்பத்தி செய்யவும வழியேற்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்குள் சகலருக்கும் தேவையான பனங்கட்டிகள் 'கற்பகம்' விற்பனை நிலையங்கள் ஊடாக வழங்கப்படும்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு ஏ. நடராசா யாழ்ப்பாணத்தில் நடாத்திய

(8ம் பக்கம் பார்க்க)

## விபரங்கள் நாளை வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களை பயிலுநர் ஆசிரியர்களாக சேர்த்துக் கொள்வதற்கான தகவல்கள் அடங்கிய 22-2-90 வர்த்தமானி விபரங்கள். விண்ணப்பபடிவ மாதிரி நாளைய ஈழநாட்டில் முழுமையாக வெளிவரும்.

சேவ்ரி ரவல்ஸ் யாழ் - கொழும்பு - யாழ். பஸ் சேவை

எமது தினசரி இரவு பஸ்சேவை மாலை 6-00 மணிக்கு 'இரட்ணம் பார்மஷி' முன்பாக ஆரம்பமாகும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பிரயாணம் செய்பவர்களுக்கு பகல் நேர இளைப்பாற்று வசதிகள் இலவசம்.

102, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (A-585) சேவ்ரி ரவல்ஸ் ஸ்தாபனம்.

## வரி விளம்பரம்

### புத்தகங்கள்

மார்ச் மங்கை, அம்புலிமாமா, சித்திரக் கதைகள் (50க்கு மேற்பட்டவைகள்) கண்ணதாசன் எழுதிய நூல்கள், பொக்கட் கலண்டர்கள், சேதுராமனின் அதிர்ஷ்ட விஞ்ஞானம் மற்றும் பல எழுத்தாளர்களின் எண் ஜோதிடங்களும், நாவல்களும் விற்பனையாகின்றன. ராஜன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-3553)


### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய, பீற்றூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 3576)

### தேவை

அச்சகவேலைகள் பயில்வதற்கு படித்த பெண் பிள்ளைகள் தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். ஞானசுரபி புத்தகக் கம்பனி, 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி 3578)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கனகராஜா மதிவண்ணன் (ராசன்)**

*ஈசன் அருளிய திருமலர்:- 25-7-1971*

*அரக்கன் அழித்த உதிர்மலர்:- 07-3-1987*

இமயத்திற்கும் எட்டாத என் அன்பின் சிகரமே; அதில் ஒளிர்கின்ற என் மெய்ச்சுடரே; எல்லைக்கும் எட்டா என் பாசத்தின் சாகரமே; அதில் பள்ளி கொண்ட என் மதிவண்ணு; மின்னல் வேகத்தில் அரக்கன் அழித்த பாணந்தான் மண்ணையும் விண்ணையும் அளக்கச் சென்றுயோ என் மார்க்கண்டா. மதி இழந்து பித்தனுய் என்னை புலம்பித் தவிக்க விட்டு எங்கே ஐயா போனுய். உன்னை இழந்து, உன்னை நினைத்து கண்ணீர் எல்லாம் வெந்நீராய் உன் வரலாறு கூறி நிற்கும் ஐயா.

உனது பிரிவால் வாடும்

ஐயா, அம்மா, சகோதரர்கள்
அப்பம்மா, அத்தான்மார்
மருமக்கள், உற்றுர், உறவினர்

இடம்:
வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம். (சி- 3574)

## பாலைதீவு ஆலயம்
# உற்சவம் இல்லாதபோதிலும் பெருமளவில் 'பக்தர்கள்!

(யாழ்ப்பாணம்)

பாலைதீவு அர்ச். அந்தோனியார் ஆலய உற்சவம் இம்முறை நடைபெருவிட்டாலும் பெருந்தொகையான யாத்திரிகர்கள் கடந்த வாரம் அங்கு சென்று திரும்பியுள்ளார்கள்.

கடந்த இரண்டு மூன்று வருடங்களாக இவ்ஆலய உற்சவங்கள் நடைபெறவில்லை, அதேபோல் இம்முறையும் சில பாதுகாப்பு ஒழுங்கு முறைகளை முன்னிட்டு உற்சவங்கள் ஏதும் நடைபெறமாட்டாது என்று முன்னதாகவே, யாழ். ஆயர் இல்லம் அறிவித்திருந்தபோதும், பெருந்தொகையான யாத்திரிகர்கள் இம்முறை அங்கு சென்று திரும்பியுள்ளதாக, அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி ஆலயத்தில் எந்த விதமான சமய ஆராதனைகள் நடைபெருவிட்டாலும், யாத்திரிகர்கள் அங்கு சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டு தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றியதாகக் கூறப்படுகிறது.

பெரும்பாலும் கரையோரப் பகுதி மக்களே, இம்முறை அங்கு சென்று திரும்பியுள்ளதாகவும், இன்னும் கூடுதலான பக்தர்கள் அங்கு தற்போதும் தங்கியிந்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதாகவும், கூறப்படுகின்றது.

இதைப் போலவே, இம்முறை கச்சதீவுக்கும், யாத்திரிகர்கள் சென்று திரும்பக் கூடும் என்றும், இந்தியாவிலிருந்தும் கச்சதீவுக்கு யாத்திரிகர்கள் வரக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (வி)

# வித்தியாலய நிர்வாகத்தில் ஒழுங்கீனங்கள்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலய நிர்வாகத்தில் பல ஒழுங்கீனங்கள் இடம்பெற்றிருப்பதாக மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் மட்டக்களப்பு மாவட்டபிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. சோமசுந்தரத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

மேற்படி சங்க அங்கத்தவர்கள் எழுத்துமூல முறைப்பாடு ஒன்றினையும் பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

வசதிக்கட்டணம், அன்பளிப்புகள் என்ற பெயரால் பெறப்பட்ட பெருந்தொகைப் பணம் கணக்கில் இடப்படவில்லை எனவும், மாணவர்களுக்குப் பற்றுச்சீட்டு வழங்கப்படாமலேயே கட்டணம் அறவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தொகைப் பற்றுச்சீட்டுப் புத்தகங்களைக் காணவில்லை என்றும், இந்தப் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் பாவிக்கப்பட்டனவா என்பது பற்றியும், இந்தப் பற்றுச்சீட்டுப் புத்தகங்களைப் பயன்படுத்தி, பணம் அறவிடப்பட்டு பின்னர் அவை கணக்கிற்குக் கொண்டு வராமல் விடப்பட்டிருக்கலாம் எனவும் எனவே இதுபற்றிப் பூரண விசாரணை நடத்துமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளனர்.

கல்லூரிக்குச் சொந்தமான தொலைக்காட்சிப்பெட்டி, நுண்காட்டிகள் உட்படப் பெறுமதியான உபகரணங்கள் பல காணுமற்போயிருப்பதாகவும், பிரதிக் கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கிராமியத் தொழில்துறை அமைச்சினுல் மேற்படி பாடசாலைக்கு 3 கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்பொழுது இந்த மாடுகள் பாடசாலையில் இல்லையெனவும், இவற்றுக்கு என்ன நடந்ததென்பது பற்றி விசாரிக்குமாறும், பாடசாலை விடுதிக்கு பாடசாலை விடுதியிலிருந்தே மின்விநியோகம்செய்யப்பட்டபோதிலும், வடுதிக்கெனத் தனியான மின் விநியோகம் கொடுக்கப்பட்டது என்ற பெயரில் பணம் கையாளப்பட்டிருப்பதாகவும், இதுபற்றி விசாரணை செய்யுமாறும் பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் மட்டக்களப்பு மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளனர். (121)

## எழுதுவினைஞர் தேவை

பிரபல கொழும்பு நிறுவனமொன்றின் பிராந்திய கிளை ஸ்தாபனமொன்றிற்கு சிட்டை / களஞ்சிய (Bill/Stock) எழுதுவினைஞர் ஒருவர் தேவை. விண்ணப்பதாரி க. பொ. த. சாதாரண பரீட்சையில் கணிதம் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவராகவும் 40 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். எதிர்பார்க்கும் சம்பளத்தைக் குறிப்பிட்டு சொந்தக் கையெழுத்துடன் எதிர்வரும் 10-03-90இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 587,
மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(ஏ 587)

## தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்
## (வரையறுக்கப்பட்டது)
# அறிவித்தல்
## வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்

மேற்படி எமது சங்கத்தில் 3000 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்குள்ளது. மேலும் விபரங்கள் கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது ரூபா. 500/- வைப்புப்பணமாக தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்பம் 13-03-90ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்'' எனத் தவருது குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரம் உபசபையினர் முன்னிலையில் 13-03-90ம் திகதி பிற்பகல் 4-00 மணிக்கு திறக்கப்படும்.

பொது முகாமையாளர்.
தெல்லிப்பழை. (ஏ 586)

## புத்தகக் கண்காட்சி

(தென்மராட்சி)

பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் ஆதரவில் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை காலை இராமகிருஷ்ண விவேகானந்த புத்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. சாவகச்சேரி நகரக் கொத்தணி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் மங்கள விளக்கேற்றி கண்காட்சியைத் திறந்துவைப்பார்.

அன்ரனு அமைத்துக் கொடுத்தல், றேடியோ, ரி. வி. பழுதுபார்த்தல்,
மணிக்கூடுகள் திருத்திக்கொடுப்பவர்கள்.
பழைய அன்ரனுக்கள் மறுசீரமைக்கப்படும்:

**நியு வீனஸ்** **NEW VENUS**

றெக்கோடிங் அன் வாச் வேக்ஸ்
60, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

Recording & Watch Works
60, STANLEY ROAD JAFFNA.

(ஏ 588)

## பல வருடங்களின் பின் இடம்பெற்ற

# சோவியத் குடியரசுத் தேர்தல்களில் கம்யூனிஸ் கட்சி தோல்வியுறும் நிலை

### சீர்திருத்த வாதக் கட்சிக்கு வெற்றி

[மாஸ்கோ]

**சோவியத் யூனியனில் மூன்றுகுடியரசில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல்களில் கம்யூனிஸ் கட்சி தோல்வியடைந்து வருவதாகவும் 'சீர்திருத்த வாத' கட்சி அமோக வெற்றி வாய்ப்பை பெறும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

சோவியத்தில் ரஷ்யா, உக்ரெயின், பெய்லோருஷ்யா ஆகிய 3 குடியரசுகளிற்கும் நேற்றுமுன்தினம் தேர்தல் நடைபெற்றது 1,068 பாராளுமன்ற ஸ்தானங்களுக்கு 7 000 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். பெரும்பாலானோர் கம்யூனிஸ் வேட்பாளர்கள்.

இத்தேர்தலில் கம்யூனிஸ் கட்சியைவிட 'சீர்திருத்த வாத' கட்சி உட்பட பலகட்சிகளும் போட்டியிட்டன இதுவரை முடிவுகள் வெளிவந்த பல தொகுதிகளில் 'சீர்திருத்த வாத' கட்சியினர் அதிக இடங்களைப் பிடித்துள்ளனர் கம்யூனிஸ் கட்சியினருக்கு மிகக் குறைந்த இடங்களே கிடைத்துள்ளது. எனினும் முழு முடிவுகளும் இன்று அல்லது நாளையே வெளிவரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடம் சோவியத் யூனியனில் அதிபர் திரு. கொர்பச்சேவ் மேற்கொண்ட பல சீர்திருத்த நடவடிக்கைகளையடுத்து அந்த பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளது இதன் ஒரு கட்டமாகவே பல கட்சி தேர்தலும் இடம்பெற்றது

உலகின் பல நாடுகளிலும் தற்போது ஏற்பட்டுள்ள கம்யூனிச எதிர்புரட்சி விரைவில் சோவியத் யூனியனில் ஏற்பட்டு ஆட்சியை மாற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என மேற்குலக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தேர்தல்களில் கம்யூனிஸ் கட்சி படுதோல்வியடையும் பட்சத்தில் குடியரசுகளிற்கிடையே பிரிந்துசெல்லும் உணர்வு அதிகரிக்குமென்றும் எனினும் அதிபர் திரு. கொர்பச்சேவிற்கு வழங்கப்படவுள்ள அதிக அதிகார ஜனாதிபதி பதவி இவற்றை ஓரளவு கட்டுப்படுத்தலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

---

கிரிக்கெட்:

## இந்தியா வெற்றி

(வெலிங்டன்)

இந்தியா – நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஒரு ஓட்டத்தால் வெற்றி பெற்றது.

மூன்று நாடுகளிடையே நடைபெறும் இந்த ஒருநாள் சுற்றுப் போட்டியில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து ஆடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் சகலவிக்கெட்டுகளையும் இழந்து 220-ஓட்டங்களைப் பெற்றது. மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா ஒரு ஓட்டத்தால் வெற்றிபெற்றது. (சி)

---

ஓவர் ஒன்றில்

## 77 ஓட்டங்கள் பெற்று கிரிக்கெட் உலகில் சாதனை

(வெலிங்டன்)

கிரிக்கெட்டில் ஒரு ஓவரில் ஆகக் கூடுதலான ஓட்டங்களைப்பெற்று நியூஸிலாந்து மாநில வீரர் ஒருவர் சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார். அவர் ஒரு ஓவரில் 77 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

நியூஸிலாந்தில் இருமாநில அணிகளுக்கிடையில் நடைபெற்ற உலக முதற்தரமான போட்டி ஒன்றில் 'ரொபேட் வென்ஸ்' என்ற பந்து வீச்சாளர் ஒரு ஓவரில் 17 நோபோல்கள் உட்பட 21 பந்துகளைச் சந்தித்து 77 ஓட்டங்களைப் பெற்றார். இதில் அவர் 7 சிக்ஸர்களையும், 6 பவுண்டரிகளையும் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இவருக்கு பந்து வீசியவர் எதிரணியின் தலைவர் எர்வின் மக்சுவானி.

இதே போட்டியில் மற்றொரு சிறப்பம்சம், லி ஜேர்மொன் என்பவரும் ஒரு ஓவரில் 69 ஓட்டங்களை பெற்றதேயாகும். இதற்கு முன் முதல்தர போட்டிகளில் ஒரு ஓவரில் ஆகக் கூடுதலான ஓட்டமாக 36 ஓட்டங்களை 1968ல் மே. இந்திய வீரர் ஹரிசோபசும் 1984ல் இந்திய வீரர்ரவி சாஸ்திரியும் பெற்றிருந்ததேயாகும். (சி)

---

### அக்கரைப்பற்று பஸ் டிப்போ

# மூடப்படலாம்?

(அக்கரைப்பற்று)

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபையின் அக்கரைப்பற்று டிப்போ புறக்கணிக்கப்பட்டுவருகிறது.

இந்த டிப்போ 1978ம் ஆண்டில் 15 பஸ்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இன்று உருப்படியான ஒரு பஸ் பஸ்கூட கிடையாது. எந்த நேரத்திலும் இந்த டிப்போ மூடப்பட்டு, கல் மனையுடன் இணைக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஓடுவதற்கு பஸ் இல்லை, டயர்கள் இல்லை, உதிரிப் பாகங்கள் இல்லை, எரிபொருள் நிரப்புவதற்குப் பணமில்லை. ஊழியர்களுக்கு வேதனம் வழங்குவதற்கும் பணமில்லை. இந்த நிலையில் இங்குள்ள டிப்போ எத்தனை காலத்திற்கு சேவைசெய்ய முடியும் என்று ஊழியர்கள் கேட்கிறார்கள்.

இந்த டிப்போவுக்கு மிகவும் வருமானமுள்ள வீதி அக்கரைப்பற்று–அம்பாறை வீதியாகும் ஆனால் எந்த நேரமும் இந்த வீதியில் பஸ்ஸுக்காக பஸ் நிலையங்களில் தவம் கிடக்க வேண்டியதாக இருக்கிறது. பஸ்சேவை சீராக இல்லாத காரணத்தினால் பிரயாணிகள் தனியார் வான்களில் மிகவும் கூடுதலான கட்டணத்தைக் கொடுத்து ஆபத்துக்கு மத்தியில் பிரயாணம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இதுபற்றி பிரயாணிகள் கிழக்குப்பிராந்திய போக்குவரத்துச் சபை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்த போதிலும் எந்த விதமான பயனும் கிடைக்கவில்லை என்று பிரயாணிகள் தெரிவிக்கிறார்கள். (142)

---

### நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்தின்

## கடந்தகால மோசடிகளை விசாரணைசெய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் கடந்தகால நிர்வாகத்தில் பெரும்மோசடி நடைபெற்றிருப்பதாகவும்இது சம்பந்தமாகவிசாரணை நடந்தும் நடைமுறையிலுள்ள நிர்வாகசபைத் தலைவர் துண்டுப்பிரசுரமூலம் கோரியுள்ளார்.

மோசடிகளால் புதிய நிர்வாகம் நிதிப்பற்றாக்குறையினால் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றது என்றும் இதனால் நெடுந்தீவு மக்களுக்கு தேவையான நுகர்வுப்பொருளை வழங்கமுடியாது இருக்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

''கிராமிய வங்கியில் ரூபா 62000 மோசடி மிக முக்கியமானது இதைப்போல பல மோசடிகள் நடந்துள்ளன என்றும் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதுபற்றி கூட்டுறவஊழியர் தொழிற்சங்கம், யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு விசாரணை நடத்துமாறு கடித மூலம் கேட்டுள்ளது.

---

# ஜம்மு-காஷ்மீரில் நெருக்கடி

## இந்துக்கள் - சீக்கியர் வெளியேற்றம்

### ஐ. நா. செயலர் கவலை

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீரில் இடம்பெற்றுவரும் தீவிரவாத நடவடிக்கைகளையடுத்து அங்கிருந்து ஆயிரக்கணக்கான இந்துக்களும் - சீக்கியர்களும் வெளியேறிவருகிறார்கள். இதனையடுத்து நேற்று முன்தினம் புதுடில்லியில் பெரும் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை 'விஸ்வஹிந்து பரிஷத்' நடாத்தியது.

ஜம்மு காஷ்மீரில் இந்துக்களுக்கும்-சீக்கியர்களிற்கும் தீவிரவாதிகள் விடுத்த பயமுறுத்தல்களையடுத்தே அவர்கள் அங்கிருந்து வெளியேறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனைக் கண்டித்தே நேற்றுமுன்தினம் புதுடில்லியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதேவேளை நேற்றுமுன்தினம் தீவிரவாதிகளின் தாக்குதலில் நான்கு பொலிஸார் கொல்லப்பட்டனர். பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தபோதே இவர்கள்மீது தீவிரவாதிகள் தாக்குதலை மேற்கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜம்மு காஷ்மீர் விவகாரம் குறித்து ஐ. நா. செயலர் திரு. பெரஸ் டி கியூலர் கவலை தெரிவித்துள்ளார். அங்கு கடந்த சில வாரங்களாக இடம்பெற்ற பல சம்பவங்களில் பொதுமக்கள் பலர் பலியானது குறித்தும் அவர் கண்டனம் தெரிவித்ததுடன் இராணுவத்தினரின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துமாறும் கேட்டுள்ளார். (சி)

---

விசர்நாய்க் கடி

## மருந்திற்கு தட்டுப்பாடு! வைத்திய அதிகாரி அறிவுரை

(யாழ்ப்பாணம்)

''விசர்நாய்க் கடிக்குப் பாவித்துவரும் ஊசி மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவும் இவ்வேளையில், முதற்கட்டமாக வளர்க்கும் நாய் அனைத்துக்கும் தடுப்பூசிபோடுவதற்கான நடவடிககைகளை உடன் மேற்கொள்ள வேண்டும். மேலும் கட்டாக்காலி நாய்கள் அனைத்தையும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகளையும் உடன் ஆரம்பிக்க வேண்டும்.''

இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பதில் பணிப்பாளரும் சட்டவைத்திய அதிகாரியுமான டாக்டர் செல்வி கனகரத்தினம் தெரிவித்தார்.

மேலும இது சம்பந்தமாக அவர் தெரிவிக்கையில்; தெல்லிப்பழை, மந்திகை வைத்தியசாலைப் பகுதி மக்களைத்தவிர மன்னார் கிளிநொச்சி, மாங்குளம், புதுக்குடியிருப்பு பளை, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாண மக்கள் இம் மருந்து பாவிப்பதற்கு யாழ். போதனா வைத்தியசாலையே நாடுகின்றனர்

இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நாளொன்றுக்கு சுமார் முப்பந்தைந்து பேர் இவ்வூசி மருந்துகளை பாவித்துவருகின்றனர் எனினும் போதியளவு தடுப்பூசி மருந்துகள் தற்பொழுது இவ் வைத்தியசாலைக்குக் கிடைப்பதில்லை எனவும் தெரிவித்தார்

கடந்த வாரமும் 450 சி சி. அளவு தடுப்பூசியே யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இது ஒரு நோயாளிக்கு ஒரு நாளைக்கு 3 சி. சி. படி தற்போது வரும் நோயாளிக்கு மூன்று நாளைக்கே போதாது. இம்முறை வழங்கும் மருந்தின் அளவுத் தொகையை பலமடங்கு அதிகரித்துத் தரும்படியாகக் கேட்டுள்ளோம்.

இவ்வூசி மருந்து பற்றாக்குறைவினால் நேற்றும் நாற்பது பேர் வரை திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து வந்த பின்தான் இவ்வூசி திருப்பிப் போடப்படவுள்ளது. நேற்று இவ்வூசியைப் பெற கொழும்பிற்கு யாழ். போதனா வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வண்டி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார் (56)

---

## இராணுவத்தின் மாறுதல் போக்கால்

# சீன அரசு பெரும் கவலை

### ஜனநாயகப் புரட்சி ஏற்படலாமென அச்சம்

(பீக்கிங்)

சீனாவில் இராணுவம் மத்தியில் புரட்சிகர கருத்துகள் ஏற்பட்டு வருவதையடுத்து அரசு பெரும் கவலையடைந்துள்ளது. விரைவில் கடந்த வருடம் இடம்பெற்றது போல் ஜனநாயக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலமாக சீனாவில் 30 லட்சம் இராணுவ வீரர்களிடையேயும் கம்யூனிஸ எதிர்ப்பு உணர்வுகள் தோன்றிவருவதாகவும் இதன் மூலம் ருமேனியாவில் தோன்றிய நிலைகூட சீனாவில் தோன்றலாமென அரசுத் தலைவர்கள் அஞ்சுவதாகவும் கூறப்படுகிறது

கடந்தவருடம் ஜூன்மாதம் 'தியனென்மென்' சதுக்கத்தில் இடம்பெற்ற மாபெரும் ஜனநாயக ஆர்ப்பாட்டம் இராணுவம் மூலம் அடக்கப்பட்டது இராணுவம் மத்தியில் பலத்த எதிர்ப்பினை தோற்றுவித்துள்ளது. இதையடுத்து தற்போது அங்கு பல மாற்றங்கள் ஏற்படும் அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளது.

இந்த மாற்றங்கள் அரச மத்தியில் பலத்த கவலையை ஏற்படுத்தியுள்ளதுடன் மீண்டும் கடந்த வருடம் போல ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறலாமெனும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை இராணுவத்தினரிடையே தமது செல்வாக்கை நிலைநிறுத்தும் பலத்த முயற்சியில் தலைவர்கள் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

---

## இருநூறு ரூபா சம்பள உயர்வு

(யாழ்ப்பாணம்)

அரியாலை, கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய தெ. ப. பொ. கூ. சங்கங்கள், அரசாங்க ஊழியர்கள் பெறும் ரூபா 200 தமது ஊழியர்களுக்கு வழங்க முன்வந்திருக்கின்றது. (ம)

### பணிவாக்கு

''நேர்மையற்ற செயல்களால் உடனே அபாயம் வராவிட்டாலும், நாளடைவில் அச்செயல்கள் பெருகப்பெருக அவற்றின் வலிமை மிகுந்து ஒன்றுகி வெளிப்பட்டு தீச்செயல் புரிந்தவனைத் தாக்கும்.''

- மநுதர்மநீதி.

## நமது நோக்கு

# மருந்துகளிற் போலி மன்னிக்க முடியாதது!

கிராமப் பகுதிகளிலுள்ள மருந்து விற்பனை நிலையங்களிற் போலி ஏஜென்டுகள் அதிக கூடுதலான விலைக்கு மருந்துகளை விற்பனை செய்து வருவதாகப் புகார் செய்யப் பட்டுள்ளது.

எங்கும் எதிலும் கலப்படம் இரண்டறக்கலந்துவிட்ட இந்த நாளிலே, உணவுப் பொருட்கள், மருந்துகள் ஆகியவற்றிலும் கலப்படத்தையோ, நியாயமற்ற விலை உயர்வையோ கண்டிக்காமல் இருக்கமுடியாது.

புது வாகனங்களைப் பாவித்து, தாம் விற்பனை செய்யும் மருந்து வகைகள் உனது தயாரிப்பு எனக்கொடுத்து விற்பனையாளர்களை ஏமாற்றி வருவதாகவும் கூறப்படுகின்றது.

இப்படிக் கூறுபவர்கள் யார்? யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கச் செயலாளரே.

அரசாங்க அங்கீகாரம் பெற்றே மருந்துப்பொருட்கள் விற்பனை செய்யப்பட வேண்டும். இதற்கெனப் பல விதிமுறைகள் உள்ளன.

போதிய கண்காணிப்பு இல்லாத காரணத்தினுல், யாரும் எதையும் உற்பத்தி செய்து விற்றுவிடக் கூடிய சூழ்நிலை உருவாகிவிட்டது.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மருந்து வகைகளைப் பெற்றுக் கொண்டால், போலி மருந்துகளைப் பெறும் அபாயதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் மருந்துகளைப் பற்றிக் கூறிய ஆலோசனை என்ன?

''உற்றான் அளவும்
பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச்செயல்''
(குறள்-949)

நோயாளியின் பருவம், வேதனை, வலி, ஆகிய குறிகள ஆராயப்பட்டு, நோயின் தொடக்கம், வீறு என்பன கண்டறியப்பட்டு ஏற்ற மருந்தைத்தெரிவு செய்து அது உண்ணவேண்டிய காலம் சூழ்நிலை ஆகியன கருத்தில் எடுக்கபபட்டு, கற்றவனுற் கொடுக்கப்பட வேண்டியதே மருந்து.

கற்றவர் அல்லாத மற்றவராற் கொடுத்தால் என்னுவது?

இன்று நடப்பதென்ன? சில வகை நோவுகள் வலிகள், காய்ச்சல்கள் ஆகியவற்றைக் கண்டதுமே நோயாளியே மருத்துவராகிறுர். சில வேளைகளில் உற்றுர் உறவினரும் மருத்துவராகிறுர்கள்.

''இதை எடுத்துப்பார், சரிவரும்!'' என்ற ஆலோசனை வழங்கப்படுகின்றது. தற்காலிகமாக வலியோ, காய்ச்சலோ, சரிவந்தாலும் ஆள் 'சரி' வருமோ என்பது சந்தேகம்தான்!

இந்தச் சூழ்நிலை உருவாகிய காரணம் என்ன? உடல் நலம்பற்றியபோதிய அறிவின்மை; விளம்பரங்களின் ஆக்கிரமிப்பு; 'மருந்துத்துண்டுகள்' இன்றியே மருந்துகள் கிடைக்கும் வாய்ப்பு.

கண்டபடி எடுக்கும் மருந்துகளின் பக்கவிளைவுகள் பற்றிச் சிந்திப்பார் யார்? உடல்நலத்திற்கு ஏற்படும் தீமைகளைப்பற்றி எண்ணிப் பார்ப்பவர்கள் எத்தனை பேர்?

இந்தச்சூழ்நிலையில்போலி மருந்துகளும் தாராளமாகப் பாவனைக்கு வந்துவிட்டால்?

ஏதுமறியாத அப்பாவிப் பொதுமக்கள் இத்தகைய ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும்.

போலி மருந்துகளை உற்பத்தி செய்வோரும், விற்பனை செய்வோரும் சமூகத்திற்கு ஏற்படுத்தும் தீமைகள் மன்னிக்கமுடியாதவை என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேம்.

## தவக்கால நற்சிந்தனை

### மன்னிப்பு

''எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னித்தருளும்'' நாம் எவ்வகையில் பிறர் குற்றங்களை மன்னிக்கிறேமோ அவ்விதமாகவே இறைவனும் எம்மை மன்னிப்பார். இறைவனின் மன்னிப்பை யேசு கூறிய ஊதாரியின் உவமை தெளிவாகக் காட்டுகின்றது. தந்தையிடமிருந்து பிரிந்து சென்ற இளையமகன் தான் கொண்டுவந்த சொத்தையெல்லாம் வீண் செலவு செய்கின்றுன் அவனது சொத்தெல்லாம் அழிந்தபின் நண்பரால் கைவிடப்பட்டு ஓர் குடியானவனிடம் பன்றி மேய்க்கச் செல்கிறுன். யூதர் பன்றிகளை வெறுப்பவர்கள். இளையமகனின் இழிவான நிலையை யேசு இவ்விதமாக விபரிக்கிறுர். தனது வறிய நிலையை உணர்ந்து, பசிக்கொடுமையினுல் வாட்டப்பட்டவனுக ஓடிவரும் அவனை நெடுநாளாக எதிர்பார்த்திருந்த தந்தை ஓடிச்சென்று அணைத்து முத்தமிடுகிறுர். எக்கேள்வியும் கேளாமல் மிதியடி, மோதிரம் பட்டாடை அணிவித்து வேலைக்காரனுக இல்லாமல் தன் சொந்தமகனுகவே மீண்டும் ஏற்றுவிருந்துகொண்டாடுகிறுர். இவ்விதமாக ஊதாரித்தனமாக அன்பு செய்து மன்னிக்கும் அந்தத் தந்தையைப்போன்று, இறை தந்தையும் ஓர் பாவி எத்தனை தடவை பாவம்செய்து திருப்பி மனம்வருந்தி வரும் வேளையிலும் அரவணைத்து மன்னிக்கிறுர் என்று கூறுகிறுர் யேசு. அந்த வானகத் தந்தையைப் போன்று நாமும் எமக்கெதிராகக் குற்றம் செய்பவர்களை எத்தனை தடவையும் மன்னிக்கத்தயாராக இருப்போமாக.

அருட்திரு அன்ரனி பாலா

# கோர்பச்சேவின் சீர்திருத்தமும் ருமேனிய சர்வாதிகாரியின் சுகபோக வாழ்க்கையும்

சோவியத் அதிபர் மிகேல் கோர்பச்சேவின் 'பெரஸ்ரொய்க்கா' சீர்திருத்தத்தின் பின்பு, கம்யூனிஸ்ட் நாடுகளில் சீர்திருத்தம் கோரிப் போராட்டங்கள் நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன.

முதலில் சீனுவில் மாணவர் கிளர்ச்சியாக ஆரம்பிக்கப்பட்டு, பின் 'டென் பியாவோ சிங்'கால் இராணுவத்தைக் கொண்டு புரட்சி முறியடிக்கப் பட்டது.

கிழக்கு ஜெர்மனி மக்கள் ஆரம்பத்தில் செக்கோஸ்லவாக்கியா சென்று மேற்கு ஜெர்மனிக்குச் செல்ல முற்பட்டனர். ஈற்றில் பேர்லின் சுவரை இடித்து 'ஜனநாயகத்தை'யும் சீர்திருததத்தையும் நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறுர்கள்.

இதன் வரிசையில் ருமேனியாவில் புரட்சி ஆரம்பிக்கப்பட்டது. 24 வருடங்கள் மக்களைச் சொல்லொணுத் துயரத்தில் ஆழ்த்திய, கம்யூனிஸப் போர்வையில் ஆட்சி நடத்திய சர்வாதிகாரி சொசெஸ்குவின் ஆட்சி 'சீர்திருத்தம் கோரிய மக்களால் ஆட்டங் கண்டது.

சொசெஸ்குவின் ஆட்சியில் மக்கள் ஆத்திரம் கொள்வதற்குக் காரணம் நாடு வங்குரோத்து நிலையில் இருந்ததாகும். வெளிநாடுகளில் பட்ட கடன்களுக்கு வட்டி கட்டினுர். மக்கள் பசி, பட்டினியால் வாடினர்.

மக்களை அடக்குவதற்கு என்றே அநாதைப் பிள்ளைகளைக் கொண்டு ஒரு பாதுகாப்புப் படையை உருவாக்கினுர். இதில் 60,000 வீரர்கள் இருந்தனர். அநாதைகள் ஆனபடியால் இவர்கள் சொசெஸ்குக்கு விசுவாசமாகவும் நடந்து கொண்டார்கள்.

ஆஸ்பத்திரிகளில்கூட வயதானவர்கள் சென்றபோது கண்டிப்பாக அவர்களுக்கு மருந்து வழங்கக்கூடாதென்று கட்டளையிட்டார் ருமேனிய மக்கள் என்றும் இளமை உள்ளவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்பது சொசெஸ்குவின் கொள்கை.

சொசெஸ்கு ஒரு நாளைக்கு ஒரு உடுப்பு உடுத்துக்கொள்வார். ஒருநாள் போட்ட உடையில் யாரும் நஞ்சைத் தடவிக் கொன்றுவிடுவார்களோ என்ற பயம்

சொசெஸ்குவிலும் பார்க்க அவர் மனைவி எலினு, ருமேனியாவில் தான் ஒரு புத்திஜீவி என்று நினைத்துப் பல புத்தகங்கள் எழுதினுர். அவருடைய புத்தகங்கள் பல்கலைக்கழகங்களில் பாடப் புத்தகமாக வைக்கப்பட்டிருந்தன. ருமேனியாவின் பொருள்களைச் சுரண்டி, சுகபோக வாழ்க்கை வாழ்ந்தவர் எலினு.

டிசம்பர் 17ந்திகதி திமிசோரா மாணவர்களால் ஆரம்பிக்கப் பட்ட புரட்சியால், டிசம்பர் 25ந் திகதி சொசெஸ்குவும், அவர் மனைவியும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர்.

சொசெஸ்கு: இந்த நீதிமன்றம் சட்டபூர்வமானதல்ல. அரசியல் சட்டப்படி செல்லுபடியற்றது.

நீதிபதி: அரசியற் சட்டம் உங்களைவிட எங்களுக்குத் தெரியும்.

சொசெஸ்கு; நான் உங்களோடு பேசவேண்டிய அவசியமில்லை.

நீதிபதி: உங்கள் ஆட்சியில் 64,000 மக்கள் இறந்திருக்கின்றுர்கள்.

சொசெஸ்கு: இது ஆச்சரியமானது.

நீதிபதி: அப்ப, நீங்கள் செய்தது விஞ்ஞானமா?

சொசெஸ்கு; நான் ருமேனியாவின் தலைவன். என்னை நீங்கள் கட்டுப்படுத்தமுடியாது.

நீதிபதி: உங்கள் குடும்பம் செய்த அநியாயத்தால் மக்கள் துன்பப்படுகிறுர்கள். அதனுல் உங்கள் இருவருககும் மரணதண்டனை விதிக்கிறேன்.

இதன்படி டிசம்பர் 26ந் திகதி ருமேனிய அதிபர் சொசெஸ்குவும், அவர் மனைவி எலினுவும் சுட்டுக் கொல்லப்பட்டனர். மக்கள் மகிழ்ச்சியில் திளைத்தார்கள்.

— மணிசேகரன்

## மக்கள் கருத்து

### பாதை சீர்கேடு

நாவற்குழி கிழக்காகிய தச்சந்தோப்பையும், கைதடியையும் இணைக்கும் சுமார் இரண்டு மைல் தூரமான வீதி கடந்த சில ஆண்டுகளாகத் தேடுவாரற்ற நிலையில் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றது.

மறவன்புலோ, கோயிலாக்கண்டி, வேலம்பிராய், தச்சந்தோப்பு போன்ற கிராம மக்களுக்கு மிகவும் முக்கியமானதாகவும், தினமும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பிரயாணம்செய்யும்இப்பாதை துவிச்சக்கர வண்டிகள் கூட ஓடமுடியாத நிலையிலேயே இருக்கிறது.

பஸ்போக்குவரத்துக்கு அவசியமான இப்பாதை, பஸ் போக்குவரத்து இல்லாதபட்சத்தில்பாதசாரிகளாவது நடந்துசெல்லக்கூடியதாக அமைத்துத் தரமாட்டார்களா? என இப்பாதையைப் பயன்படுத்தும் பாவனையாளர்கள் அங்கலாய்க்கிறுர்கள்.

இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனியாவது நடவடிக்கை எடுப்பார்களென இப்பகுதி மக்கள் ஆவலுடன் எதிர்பாக்கிறுர்கள்.

எஸ். சந்திரன்
நாவற்குழி.

## சிரமதானமூலம் திருத்தப்பட்டது

(அச்சுவேலி)

நவக்கிரி அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அரசாங்கத்தினுல் வழங்கப்பட்ட இரண்டரை ஏக்கர் நிலம் சிரமதானமூலம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

சிரமதானப்பணியில் அக்கிராமத்தைச் சேர்ந்த 75 பொதுமக்களும் 40 மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

1977-ம் ஆண்டு அரசாங்கத்தினுல் சுவீகரிக்கப்பட்டு பாடசாலையின் பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்ட இந்த நிலம் இதுவரை காலமும் திருத்தியமைக்கப்படாமல் இருந்துவந்தது. பாடசாலை அபிவிருத்திச் சபையினரும் பொதுமக்களும் இணைந்து சிரமதானமூலம் திருத்தி அமைத்துள்ளனர். (74)

## இளிநொச்சியில் புதிய பதிவாளர் அலுவலகம்

(மானிப்பாய்)

1897ம் ஆண்டிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்குரிய பிறப்பு, இறப்பு மற்றும் காணிப்பதிவேடுகள் சம்பந்தமான சகல ஆவணங்களும் நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு எடுத்துச்செல்லப்பட்டன. இம்மாவட்டத்துக்குச் சொந்தமான சகல பதிவேடுகளும் யாழ். பிறப்புப் பதிவாளர் அலுவலகத்திலேயே இதுவரை காலமும் வைக்கப்பட்டிருந்தன. தற்பொழுது கிளிநொச்சியில் புதிய பதிவாளர் அலுவலகம் கட்டிமுடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே மேற்படி ஆவணங்கள் கிளிநொச்சிக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

பிறப்பு, இறப்பு பதிவு பிரதிகளைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்வோர் இம்மாதம் 14ந் திகதி முதல் விண்ணப்பம் செய்யலாமென கிளிநொச்சி மாவட்ட காணிப்பதிவாளரும் மேலதிக மாவட்ட காணிப்பதிவாளருமான திரு. ந. சதாசிவ ஐயர் தெரிவித்துள்ளார் (71)

## பலதும் பத்தும்

### யார் இந்த 'மார்னி...?'

இந்தோனேசியாவில் 'கொம்பஸ்'என்றபத்திரிகையில் அந்தப் பெண் குழந்தையின் படம் பிரசுரிக்கப்பட்டிருந்தது; அவள் பெயர்... மார்னி!

அவளைப் பார்க்க விகாரமாக இருந்தது. இதயமும் மார்பு எலும்புகளும் வெளியே தள்ளிக்கொண்டிருந்தன சுவாசிப்பதற்காக ஒட்சிசனைப்பெறுவதற்காக அவளின் மூக்கு மயிர்கள் நீண்டு அவலட்சணமாகக் காணப்பட்டன.

''இவளாற் சிரிக்கவும் முடியாது: அழவும் முடியாது!''— இப்படிப் படத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

வாசகர்கள் பலர் படத்தைப் பார்த்துப் பரிதாபப்பட்டிருக்கிறுர்கள்; பரபரப்படைந்துள்ளார்கள்!

பரபரப்பு பிரச்சனையாக மாறிவிட்டது. சூழலுக்குப் பொறுப்பான அமைச்சரே விளக்கம் அளிக்கவேண்டியதாயிற்று.

உலகின் மிகப்பெரிய பதினைந்து நகரங்களில் ஒன்று ஜகார்த்தா அது தூசுபடிந்த நகரம். அங்கு சுற்றுடல் மாசுறுவதை நிறுத்தாவிடில் ...... மூன்றுசந்ததிக்குப்பின் இப்படித்தான் பிள்ளைகள் பிறக்கும் என எச்சரிக்கை விடுத்தார் அமைச்சர்.

சுகாதாரத்தைப் பேண சுற்றுடலைச் சுத்தமாகவைத்திருக்கப் பிரசாரம் நடந்திருக்கிறது.

பல பக்கங்களிற் சொல்லவேண்டிய சங்கதியை ஒரு படமூலம் சொல்லிவிட்டார்!

அதுசரி...... மார்னி எப்படிப் பிறந்தாள்? பெற்றோர் யார்?

பயப்படாதீர்கள்!...... அது பத்திரிகையாளரின் கற்பனையில் உருவாகிய படம்!

வாணி

## உங்கள் பிரச்சனை என்ன?

**கேள்வி:** நான் ஒரு அரச ஊழியன் பன்னிரண்டு ஆண்டுச் சேவையைப் பூர்த்தி செய்துள்ளேன். தொடர்ந்துவேலைசெய்யமுடியாதளவிற்குகடுமையான ஆஸ்த்மாவால் பாதிக்கப்பட்டுள்ளேன். இரண்டரை மாதங்களாக வைத்திய அத்தாட்சிப் பத்திரம்கொடுத்திருக்கிறேன். வயதும் 39 ஓய்வு பெறுவதற்குரிய வழிகள் என்ன?

ப. அருமைத்துரை இருபாலை.

**பதில்:** மூன்று மாதங்களின் பின்னர் உங்களது வைத்தியர் வைத்தியச் சான்றிதழில் வைத்தியச் சபைக்கு செல்லுமாறு குறிப்பிட்டிருந்தால் உங்கள் திணைக்களத் தலைவர் இதனை சுகாதாரத் திணைக்களத்துக்குத் தெரிவிப்பார்.

சுகாதாரத் திணைக்களம் ஓர் வைத்தியச் சபையை (Medical Board) நியமித்து அறிக்கை கோருவார் வைத்தியச் சபைக்குச் செலும்போது நீங்கள் ஒரு விசேட வைத்தியரிடம் வைத்தியச் சானறிதழ் (Treatment Certificate) பெற்றுச் செல்லவேண்டும். அவர்களின் சிபார்சின் பேரில் நீங்கள் ஓய்வு பெறலாம்.

## ஊனமுற்றோர்! வாழ்வில் ஒளிவிளக்கு

(யாழ்ப்பாணம்)

''விழிப்புலன், செவிப்புலன் அற்ற சிறுர்கள் சகல பாடசாலைகளிலும் கல்வி கற்பதற்கான முறையில் அத்துறையில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களை பாடசாலைகளில் நியமிக்க வேண்டும். இதற்கான ஆசிரியர்களை உருவாக்குவதற்கு பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ஒன்றினை விரைவில் ஆரம்பிக்கவேண்டும்.''

இவ்வாறு யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க அங்குரார்ப்பண வைபவத்தின் போது, அச்சங்கத்திற்கான செயற்திட்டங்களில் ஒன்றுன விழிப் புலனற்றோர்க்கு கல்வி புகட்டல் என்ற திட்டத்தின் மீது விளக்கம் தெரிவிக்கையில் அச்சங்க வேலைத் திட்ட அதிகாரி சங்கைக்குரிய சகோதர லூட்ஸ் கூறினுர்.

''இதேபோன்று ஊனமுற்றோர்களுக்கான அபிவிருத்திப் பணியில் பல வகையான தொழிற்சாலைகள் அமைத்தலும் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்தொழில் அடிப்படையில்தான் தற்பொழுது வசந்தபுரம், கொழும்புத்துறை கோழிப்பண்ணை அமைக்கப் பட்டுள்ளது. அடுத்து வடமராட்சியில் கொப்பி கட்டுப தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளது. இதனைத் தொடர்ந்து மேலும் பல தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவுள்ளனர்'' என்றும் அவர் தெரிவித்தார். (56)

## நாவற்குழியில் பாடசாலைக்குள் புகுந்து பொருட்கள் திருட்டு

(நாவறகுழி)

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள், பல ஆயிரக்கணக்கான பெறுமதியுள்ள பொருட்களையும், பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

மேற்படி வித்தியாலயத்தின் அலுவலகம், நூலகம், விவசாயக்கூடம், மனைவேலைக்கூடம், வாழ்க்கைத் திறன்பகுதி என்பனவற்றில் உள்ள அலுமாரிகள் உடைக்கப்பட்டு, 7,280 ரூபா பெறுமதியான பொருடகளும், 428 ரூபா பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாகக் கைதடி தமிழீழ விடுதலைப் புலிகள் அலுவலகத்திலும், யாழ்ப்பாணம் பொலிஸிலும் முறைப்பாடுசெய்யப்பட்டு, யாழ் கல்வித் திணைக்களத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (107)

## ஆசிரிய மாணவர்கள் முறிப் பத்திரங்களை சமர்ப்பிக்க கோரிக்கை

(நாவற்குழி)

தொலைக்கல்வி மூலம்பயிற்சிபெற்ற 87/89ம் ஆண்டுக்கான பயிற்சிநெறியைப் பின்பற்றிய ஆசிரிய மாணவர்கள் தமக்குரிய முறிப்பத்திரங்களை இம் மாதம் 24ம், 25ம் திகதிகளுக்கிடையில் முடித்துக்கொடுக்குமாறு யாழ் மாவட்ட தொலைக்கல்விப்பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ம. செ. அலெக்ஸாந்தர் தெரிவித்துள்ளார்.

முறிப்பத்திரங்களைப் பூர்த்தி செய்வதற்கான படிவங்களை யா/வேம்படி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள தொலைக் கல்விப் பிரிவின் மத்திய நிலையத்தில் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் திரு. அலெக்ஸாந்தர் தெரிவித்தார். (107)

## மரமுந்திரிகை செய்கை கன்றுகள் விநியோகம்

(உடுவில்)

யாழ். மாவட்டத்தில் மரமுந்திரிகை செய்கையை ஊக்குவிக்க யாழ். மாவட்ட விவசாய சேவைகள் திணைக்களம் முயற்சிகள்மேற்கொண்டு வருகின்றது.

இதற்கென மரமுந்திரிகைக் கன்றுகளை திணைக்களம் விவசாயிகளுக்கு யாழ். மாவட்ட கமநல சேவை நிலையங்களூடாக விநியோகித்து வருகின்றது.

போதியளவு மரமுந்திரிகை கன்றுகள் தற்போது திணைக்களத்திடம் இருப்பதாகவும் இவை கமநல சேவை நிலையங்களூடாக விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் திணைக்கள உத்தியோகத்தர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு விவசாய சேவைகள் திணைக்களம் கமநல சேவை நிலையங்களூடாக சுமார் பத்தாயிரம் மரமுந்திரிகைக் கன்றுகளை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (109)

## பாடசாலை வளர்ச்சியில் கூடுதல் கவனம்

(அச்சுவேலி)

நவக்கிரி அபிவிருத்திச்சபை அக்கிராமத்தில் அமைந்துள்ள அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தவுள்ளது. இது தொடர்பான தீர்மானம் அண்மையில் நடைபெற்ற நவக்கிரி அபிவிருத்திச்சபையின் பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

புதிய நிர்வாகிகள் தெரிவின் போது ஆ. தாளையா தலைவராகவும், பெ. செல்லத்துரை செயலாளராகவும், இ. சந்திரன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் 7 பேர் கொண்ட நிர்வாகக் தழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (74)

## இராசி பலன்

புதன்கிழமை
07-03-1990

**மேடம்:** மனதிலே கவலை, பணக் கஷ்டம், நோய் வாட்டும், குடும்பத்தில் பிரிவு, அகால போஜனம்.

**இடபம்:** புதிய உறவு, பணவரவு, தொழில் முன்னேற்றம். தாய்வழி நினைவு, குடும்ப மகிழ்ச்சி.

**மிதுனம்:** குழப்பமடைதல், அந்நியர் உதவி, தொழில் பாதிப்பு நற்கருமம்.

**கடகம்:** புதிய முயற்சி. அதிகாரிகள் பாராட்டு, திருமணப் பேச்சுக்கள், மாமனுர் உதவி, புகழ்.

**சிங்கம்:** எதிர்பாராத தொல்லை, உறவில் மாற்றம், குடும்பத்தில் வைத்தியசெலவு, தொழில் முயற்சி.

**கன்னி:** தொழில் லாபம், குடும்ப சுகம், வெளியூர் செய்தி, பொதுப்பணிகளில் பாராட்டு.

**துலாம்:** புதிய யோசனை, வேலைக்கஷ்டம், அதிகாரிகள் தொல்லை, அநாவசியசெலவு.

**விருச்சிகம்:** குடும்பத்தில் கவலை மிகுதி, பொருளாதார இழப்பு, புத்திரர் மகிழ்ச்சி, பகைவர் தொல்லை.

**தனுசு:** விபத்திற்குள்ளாகுதல். மறைமுக எதிர்ப்பு, குடும்பத்தில் கருத்து முரண்பாடு, தொழில் நஷ்டம்.

**மகரம்:** அந்நியர் சகாயம், தொழில்லாபம், குடும்பத்தில் குதூகலம், சகோதரர் உதவி.

**கும்பம்:** தொழில்முன்னேற்றம், எதிர்பாராத உதவி, பணவரவு, குடும்பத்தில் குழப்பம்.

**மீனம்:** உடல் உபாதை, மனைக்கஷ்டம், அதிகாரிகள் தொல்லை, சொத்துப் பிரச்சனை, மனச்சுமை.

## பண்டத்தரிபபு கூட்டுறவு சங்க ஊழியர்க்கு சம்பள அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் 200 ரூபா சம்பள அதிகரிப்பு பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்களுக்கும் இம்மாதம் தொடக்கப் வழங்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் ஒன்று அண்மையில் சங்கத் தலைவர் திரு. திரு. க. கந்தசாமி தலைமையில் நடைபெறற சங்க இயக்குநர் சபையின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இம்மாதச் சம்பளத்தில் இந்த இருநூறு ரூபா சம்பள உயர்வு சகல ஊழியர்களுக்கும் வழங்கப்படுமென்றும் கடந்த ஜனவரி பெப்ரவரி மாதங்களுக்கான இருநூறு ரூபாவும் பின்னர் வழங்கப்படுமென்றும் இதுபற்றித் தகவல் தருகையில் சங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (72)

## மார்ச் 10 கைதடி அநாதைகள் இல்ல கொடி தினம்

(உடுவில்)

கைதடி சைவ அநாதைகள் இல்லத்தின் கொடிதினம் மார்ச் மாதம் 10-ம் திகதி அனுட்டிக்கப்படவுள்ளது.

கொடிதினத்தை முன்னிட்டு அநாதைகள் இல்லத்தினரால் யாழ்ப்பாண மாவட்டத்திலும், வேறு இடங்களிலும் நிதி சேகரிக்கப்பட்டுவருகின்றது.

கொடிதினத்தை சிறப்பாகக் கொண்டாடவும் திரட்டப்படும் நிதியைக்கொண்டு கைதடி சைவ அநாதைகள் இல்லத்தில் தங்கிவாழும் சிறுவர்களுக்கு வேண்டியபல்வேறு வசதிகளைச் செய்துகொடுக்கவும் மேற்படி இல்ல நிர்வாகிகள் முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

மார்ச் 10ம் திகதி மேற்படி அநாதைகள்இல்லத்தில் நடைபெற உள்ள விசேட வைபவ நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராக தவத்திரு சுவாமி சித்ருபானந்தா கலந்துகொள்ள இருக்கிறுர். (109)

## உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

(உடுவில்)

மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடறபயிற்சிப் போட்டிகள் மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றன.

வெற்றியீட்டிய பாடசாலைகள் விபரம் வருமாறு;

**13 வயது ஆண்கள்;** 1. சுதுமலை சிநமயபாரதி வித்தியாசாலை, 2. இடைக்காடு மகாவித்தியாலயம், 3. சுன்ஞகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

13 வயது பெண்கள்: 1. அச்சுவேலி சென்திரேசா மகளிர் வித்தியாலயம், 2. உடுவில் மகளிர் கல்லூரி. 3. சுன்ஞகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

**17வயது ஆண்கள்:** 1 உரும்பராய் இந்துக்கல்லூரி, 2. சுன்ஞகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 3. மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலயம்.

17 வயது பெண்கள்: 1. மருதனுமடம் இராமநாதன் கல்லூரி 2. அச்சுவேலி சென்திரேசா மகளிர் வித்தியாலயம் 3. உடுவில மகளிர் கல்லூரி.

19 வயது ஆண்கள்: 1. சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலை 2. உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை 3. புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி.

19 வயது பெண்கள்: 1. மருதனுமடம் இராமநாதன் கல்லூரி 2. உடுவில் மகளிர் கல்லூரி 3. சுன்ஞகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி [109]

## வட்டு மரதன்ஓட்டப் போட்டி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் ஷப்ரு யுனிகோ பினனஸ் லிமிட்டெட்டும் இணைந்து நடாத்திய மரதன் ஓட்டப் போட்டியில் செல்வன் எஸ். பிரபாகரன் முதலாமிடத்திற்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் ஓர் அங்கமாக நடாத்தப் பெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் ஐம்பத்தி நான்கு மாணவர்கள் கலந்துகொண்டனர். இவர்களில் எஸ். பிரபாகரன், எம். பால்ஸ்பரன், என். அருட்சோதி, என். சிவச்சோதி, எஸ், சர்வலோகநாதன், லோ. திருக்கோணேஸ்வரன் ஆகியோர் முறையே முதல் ஆறு இடங்களுக்குமான வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுக் கொண்டனர். (39)

## புதுவருட நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம், புதிய மத்தியஸ்தர்களுக்கான தேர்வுப் பரீட்சையை அடுத்த மாதம் முற்பகுதியில் யாழ். நகரில் நடாத்தவுள்ளது.

மேற்படி சங்கம். இப்பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்களை இம்மாதம 11-ம் திகதி முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 10 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடாத்தவுள்ளதாக இச் சங்கத்தின் தலைவர் திரு. க. பூபாலசிங்கம் தெரிவித்தார்.

இந்தச் சங்கத்தின் வருடாந்தப பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப் பட்டனர்:

தலைவர்: க. பூபாலசிங்கம், உப-தலைவர்கள்: பொ. மகேந்திரன், எம். டி. தம்பிராசா, கே. என். வை. மொறிஸ், டி. எம். வேதாபரணம், எல். உமாகாந்தன், செயலாளர்: க. நந்தகுமார், உப-செயலாளர்/தனுதிகாரி: என். விமலதாசன், செயற்குழு உறுப்பினர்களாக: ஆர். செல்வராசா, கே. யதுகுலசிங், எம். சிதம்பரப்பிள்ளை, ஆர். ஸ்ரீதரன், என். சிவக்குமார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனா. (வி)

## யாருடையது?

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் கண்டெடுக்கப்பட்ட நயினதீவு செல்லப்பா அருணசலம் என்பவரதும் மானிப்பாய் வடக்கு நளினி சீவரெத்தினம் என்பவரதும் அடையாள அட்டைகள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த அடையாளம்காட்டிப் பெற்றுக்கொள்ளவும். (ஆ-ர்)

# நவாலி, ஆனைக்கோட்டை பகுதிகளில் மங்கிய நிலையில் மின்விளக்குகள்! திருட்டு மின்பாவனை காரணம்!!

(மானிப்பாய்)

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதிகளில் இரவு ஏழு மணியின் பின்னர், 'ரியூப் லைற்றுகள்' எரிவதில்லை, மின்விளக்குகள் மங்கிய வெளிச்சத்தில் பாடசாலை மாணவரும் மின் பாவனையாளர்களும் அவதிப் படுகின்றனர்.

இப்பகுதிகளில் மாலை ஆறு மணிக்குப் பின்னர் களவாக மின்சாரம் பெறப்படுவதாலும் சில நிரந்தர மின்பாவனையாளர் அனுமதியின்றி ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதினாலும் மாலை 7 மணியின் பின்னர் மின் விளக்குகள் மங்கியவெளிச்சத்தில் எரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் பாடசாலைப் பிள்ளைகள் தமது பாடங்களைத் தொடர்ந்து படிக்க முடியாது திண்டாடுகின்றனர். வர்த்தக நிலையங்களில் வியாபாரம் செய்ய முடியாது உரிமையாளர்கள் நேரத்துடன் கடைகளைப் பூட்டுகிறார்கள்.

இது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ள ஆனைக்கோட்டை உப அலுவலக உயர் அதிகாரிகளும் பொது ஸ்தாபனங்களும் முன்வர வேண்டுமென்று இப்பகுதியின மின்பாவனையாளர்கள் தமது புகாரில்தெரிவித்துள்ளனர். 71

# "யாழ். உதைபந்தாட்டலீக்" இம்மாத நடுப்பகுதியில் போட்டிகளை ஆரம்பிக்கும்"

**- காரியதரிசி குமரையா**

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்'' யாழ்ப்பாண விளையாட்டுக் கழகங்களிடையே, பல உதைபந்தாட்ட போட்டிகளை நடாத்த வுள்ளது.

'நாட்டில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக கடந்த வருடங்கள் உதைபந்தாட்டப் போட்டிகளை நடாத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டதுடன், இலங்கை ரீதியில் மாவட்டத் தெரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்றுவரும் இளைஞர் உதைபந்தாட்டப் போட்டிகளிலும் நாம் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது''. என யாழ். உதைபந்தாட்ட லீக்கின் காரியதரிசி திரு. ஈ.கே. குமரையா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாம் மிகவிரைவில் கடந்த வருடம் இடைநிறுத்தப் படட 'லீக் சுற்றுப் போட்டி', 'நொக்கவுட்' போட்டிகளை தொடர்ந்து நடாத்தவுள்ளோம். அத்துடன் 13-வயதுக்குட்பட்ட இளைஞர் கோஷ்டிகளிடையே 'நொக்கவுட்' போட்டி ஒன்றையும, 'தலைவர் வெற்றிக்கிண்ணப் போட்டி'யையும் நடாத்தத் திட்டமிட்டுள்ளோம். இப்போட்டிகள் சம்பந்தமான சகல ஏற்பாடுகளையும். யாழ். உதைபந்தாட்ட லீக்கின் 'போட்டிக்குழு' தற்போது செய்து வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள், தமது கழகத்தில் புதிதாகச் சேர்த்துக் கொண்டுள்ள வீரர்களை நாம் தற்போது நடாத்தவுள்ள போட்டிகளில் சேர்த்து விளையாடுவதற்கும் அனுமதி வழங்கியுள்ளோம், ஆனால் அப்படி புதிதாக தமது கழகத்தில் சேர்த்துக் கொள்ளும் வீரர்களின் பெயர்களை. போட்டிக்குழுக் காரியதரிசி திரு. ஏ. தேவராசாவுக்கு அறிவித்து போட்டிகளில் கலந்து கொள்வதற்கு முன்பே அவரின் அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும்'' எனவும் தெரிவித்தார்.

இப்போட்டிகள் அனைத்தும் இம்மாத நடுப்பகுதியில், பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் ஆரம்பமாகலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (வி)

## மெய்வல்லுநர் போட்டி

(சித்தங்கேணி)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் பேபட்டி எதிர் வரும வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபரும் வட்டுக்கோட்டை கொத்தணி அதிபருமாகிய திரு. க. டாஸ் தலைமையில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கும் இந்த மெய்வல்லுநர் பேபட்டிக்கு பிரதம விருந்தினராக சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் கலந்து கொள்வார்.

# மன்னர் செய்திகள்

### விஜயம்

(மன்னார்)

மன்னாரில் அண்மையில் அமெரிக்க உயர் ஸ்தானிகர் வருகைதந்து மாவட்டத்திலுள்ள குளங்கள் நீர்ப்பாசன கால்வாய்கள் வீடமைப்புத் திட்டங்கள் பெருந்தெருக்கள் முதலியவற்றைப் பார்வையிட்டதோடு முக்கியமாகப் பொருளாதார பாதிப்புள்ள கிராமங்களான முருங்கன், அடம்பன், பள்ளமடு போன்ற கிராமங்களில் சென்று அங்கே பொதுமக்களுடன் உரையாடி அவர்களது தேவைகளை கேட்டறிந்தார்.

இவருடன் மன்னார் புனர் வாழ்வுத்திட்டப் பணிப்பாளர் திரு. கே. கணேஷ் தலைமைப் 'பீட உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எம். குரூஸ் ஆகியோரும் சென்றிருந்தனர். காலையில் கொழும்பிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் தள்ளாடியில் வந்து இறங்கியவர் தமது விஜயத்தை முடித்துக் கொண்டு மீண்டும் மாலை 4 மணிக்கு தள்ளாடியிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் கொழும்பு சென்றார்.

### புதிய பிரிவு

மன்னாரில் மேலும் புதிய அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்குவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் தற்சமயம் எடுக்கப்பட்டுள்ளன புதிய அரசாங்க அதிபர் பிரிவு பள்ளமடு என அழைக்கப்படும். இதன்கீழ் இலுப்பக்கடவை, வெள்ளாங்குளம், பெரியமடு, விடத்தல்தீவு, திருக்கேதீஸ்வரம் போன்ற கிராமசேவை அலுவலர் பிரிவு அடங்கும்.

### அவல நிலை

மன்னார் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் முன்னர் 22 கிராம சேவை அலுவலர் பிரிவுகள் மட்டுமே இருந்தன. இதனால் 22 கிராம சேவை அதிகாரிகளுக்கும் அங்கே கூட்டம் கூட்டுவதற்குமுன்னர் வசதியாக ருந்தது. ஆனால் தற்சமயம் ஐம்பத்தி மூன்று கிராம சேவை அதிகாரிகள் பிரிவுகளாக அதிகரிக்கப்பட்டமையால் கூட்டம் கூடுவதற்கு மிகவும் கஷ்டமாகவுள்ளது.

அத்துடன் போதிய தளபாடமுமில்லை. மேலும் இவ்வலுவலகத்தில் ஏற்கனவே பதவி நிலை அலுவலர் இடமாற்றம் பெற்றுவிட்டார். பிரதம லிகிதர் ஒய்வு பெற்றுவிட்டார்.

அவர்களின் இடங்களுக்கு இதுவரையிலும் எவரும் நியமனம் செய்யப்படவில்லை. ஆனால் பல கஷ்டங்கள் மத்தியில் வேலைகள் யாவும் துரிதமாக நடைபெறுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

### பணிப்பாளர் விஜயம்

மன்னாரில் யு. என். எச். சீ. ஆர். திட்டமூலம் உருவாக்கப்பட செயல்பாடுகளை பார்வையிட அண்மையில் ஜெனிவா நகரத்திலிருந்து யு என். எச். சீ. ஆர் சிரேட்டப் பணிப்பாளர் திரு. ஏ. எச். ஆப் மன்னார் வந்திருந்தார்.

இவர் கிணறுகள் பாடசாலைகள், அரச கட்டிடங்கள் தொழிற்சாலைகள், புதிதாக நிறுவிய வீதிகளைப் பார்வையிட்டார். இன்னும் மன்னாருக்குத் தேவையான அபிவிருத்தித்திட்டங்களைப் பார்வையிட்டார். இவருடன் மன்னார் புனர்வாழ்வுத் திட்டப் பணிப்பாளர் திரு. கே. கணேஷ் உடன் சென்று மக்களின் குறைகளை எடுத்துக்கூறி மேலும் பல திட்டங்களை நிர்மாணிக்க வகைசெய்தார்.

### புதிய அலுவலகம்

மன்னாரில் புதிதாக உருவாக்கப்பட்ட மடு உதவி அரசாங்க அதிபர் அலுவலகமும், வதிவிடமும் 10 லட்சம் ரூபா செலவில் கட்டுவதறகு பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இக்கட்டிடங்கள் யாவும் மடுவும்-பண்டிவிரிசானும் சந்திக்கும் எல்லைப்புறத்தில் நிர்மாணிக்கப்படும். இதனை காலதாமதம் ஏற்படுத்தாது உடன் கட்டி முடிப்பதற்கு அரச அதிபர் திரு ஏ. சி. செபநாயகம் பணிப்புரை வழங்கியுள்ளார்.

# நயினை கலைவிழாவில் சிறப்புமிகு நிகழ்ச்சிகள்

(மானிப்பாய்)

நயினாதீவு மணிபல்லவ கலா மன்றம் தனது 28-வது ஆண்டு நிறைவு கலைவிழாவினை சிறப்பாக கொண்டாடவுள்ளது.

இம்மன்றம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 16, 17-ம் திகதிகளில் கொண்டாடவிருக்கும் இவ்விழாவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டியும், சிறப்பு மலர் வெளியீடும் இடம் பெறுவதோடு கலைநிகழ்ச்சிகளும்நடைபெறவுள்ளன.

இம்மன்றம் இவ்விழாவின் ஞாபகார்த்தமாக சில பொதுப் பணித் திட்டங்களையும் மேற்கொள்ளவுள்ளது.

இறங்கு துறையில் மும்மொழிகளிலான வரவேற்பு பலகை நிறுவுவது, புனித தீவின் வடக்கு மத்தி தெற்கு ஆகிய பகுதிகளில் ஆறுமுக நாவலர், திருவள்ளுவர், பாரதியார் ஆகியோருக்கான உருவச் சிலைகளை அமைத்து அதனை விழாவிலன்று திறந்து வைத்தல், பொதுப் பணிகளிலும், சமயத் துறைகளிலும், கல்வித் துறைகளிலும் தங்களது காலம், நேரம், பணம் முதலியவற்றை செலவிட்ட நயினையைச் சேர்ந்த 8 கல்விமான்களினதும் உருவப்படங்களைத் திரைநீக்கம் செய்தல் ஆகியன இடம்பெறவுள்ளதாக விழா அமைப்புத் தலைவர் திரு கே. கே. சந்திரன் தெரிவித்துள்ளார். (71)

# இப்படியும் நடக்கிறது

இலங்கையில் சிங்களத்துடன் தமிழ் மொழிக்கும் சமஅந்தஸ்து உண்டு என்றும், வடக்கு கிழக்கில் தமிழ் தன் ஆட்சிமொழியாக இருக்கும் என்றும் ஐக்கிய தேசியகட்சி அரசு சட்டம் நிறைவேற்றியதும், தமிழ்மக்கள் எவ்வித ஆரவாரமுமின்றி மனதுக்குள் சிரித்துக்கொண்டனர்

சட்டம் எப்படி செயல்படுகிறது என்பதை நேரில் கண்டறிய யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தை 'சுபமா' ஒரு தடவை சுற்றி...... மன்னிக்கவும் ஊடுருவிப் பார்த்தோம்,

கொழும்பிலிருந்து கல்வி அமைச்சிலிருந்து யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வரும் கடிதங்கள், சுற்றுநிருபங்கள் தனிச் சிங்களத்தில்தான் இருக்கின்றன.

சம்பந்தப்பட்ட ஓர் அதிகாரி; பாவம், ஒவ்வொரு எழுத்தாகக் கூட்டித்தான் இந்தச் சிங்களக் கடிதங்களைப் படிக்கின்றாராம்!

சட்டம் ஒரு இருட்டறை; கழுதை என்பதெல்லாம் எப்படிப் பிழைக்கும்!

★

கல்வித் திணைக்களம் என்றதும் மற்றுமொரு விஷயம் நினைவுக்கு வருகிறது.

யாழ்ப்பாணத்தில் ஒரே பெயருடைய இரண்டு பெரிய கல்லூரிகள் இருக்கின்றன. ஒன்று மாநகரசபை எல்லைக்குள் மற்றையது சற்று, கூப்பிடு தூரத்தில்,

இந்த இரு கல்லூரிகளின் அதிபர்களும் பரஸ்பர இடமாற்றத்துக்குள்ளாகியிருக்கின்றார்கள். ஆனாலும் இவர்களில் ஒரு அதிபர் இடமாற்றத்தை விரும்பாமல் ஒய்வுபெறப் போவதாகத் தெரிகிறது.

ஒய்வுபெற இன்னும் (வயது வரம்பு) ஒரு வருடம் இருந்தபோதிலும், முன்கூட்டியே ஓய்வுபெற்று வெளிநாடு செல்லப்போவதாகவும் ஒரு செய்தி காதில் விழுகிறது.

''ஊடுருவி''

# "சிறந்த முகாமைத்துவ பண்புகளை தருவது மைதானக் கல்விதான்"

(உடுவில்)

''எமது பாடசாலை விளையாட்டுக் குழுவினர் அகில இலங்கை ரீதியில் விளையாட்டுக்களில் பங்குபற்றத் தவறியமையால், தகுதியிருந்தும் பலருக்கு அண்மையில் வழங்கப்பட உள்ள ஆசிரிய பயிலுநர் நியமனத்தில் இழப்புக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர். இவ்வருடம் நடைபெறவுள்ள அகில இலங்கை விளையாட்டுப் போட்டிகளில் எமது மாவட்ட மாணவர்களும், மாணவிகளும் பங்குபற்றி தமக்கும், எமது மாவட்டத்துக்கும் பெருமை தேடித்தர வேண்டும்.''

இவ்வாறு கொடிகாமம் கொத்தணி உடற்பயிற்சி போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் உடற்கல்வி அதிகாரி திரு. அருணகிரிநாதன் கூறினார்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயததில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு கொத்தணி அதிபர் திரு. எஸ். சின்னத்தம்பி தலைமை வகித்தார்.

கல்வி அதிகாரி திரு. அருணகிரிநாதன் மேலும் பேசுகையில்: ''வகுப்பறையில் பெற்றுக்கொள்ளும் கல்வியை விட மைதானத்தில் பெற்றுக் கொள்ளும் கல்விக்கு பல சிறப்புக்கள் உண்டு.

அனுபவரீதியான உடல், உள தாக்கங்களையும், நிவர்த்திகளையும் அங்கு மாணவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். சிறந்த முகாமைத்துவப் பண்புகளை நாம் மைதானக்கல்வியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்'' என்றார்.

உடற்பயிற்சி ஆசிரியர் திரு. சி. குமாரசாமி போட்டிகளை ஒழுங்கமைத்திருந்தார். (109)

## மெய்வல்லுநர் போட்டி

(பண்டத்தரிப்பு)

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 11-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திரு. செ. தேவதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் காரைநகரைச் சுற்றி மரதன் ஓட்டப்போட்டியும் இடம் பெறவுள்ளது. அத்துடன் அதிவேக துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டியும்இடம்பெறவுள்ளது. வித்தியாலய விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் இதற்கான ஒழுங்குகளை கவனித்துவருகின்றார். (72)

## நியமனம்

(அச்சுவேலி)

அச்சுவேலியைச் சேர்ந்த சட்டத்தரணி திரு. கே சபாரத்தினம் யாழ். மாவட்ட சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட நீதிபதி முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமானம் செய்துகொண்டார்.

இளம் சட்டத்தரணியான திரு. கே. சபாரத்தினம் யாழ். அரசாங்க செயலகத்தில் மொழிபெயர்ப்பாளராக முன்பு கடமையாற்றியவராகும.

# பயிலுநர் ஆசிரியர் மேன்முறையீடு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, கரவெட்டி பருத்தித்துறை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பயிலுநர் ஆசிரியர் தொடர்பாக செய்யப்பட்ட மேன்முறையீடுகள் பறறிய விசாரணைகள் இன்று புதன்கிழமை காலை கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய் பகுதி ஆசிரியர் பயிலுநர் தொடர்பான விசாரணைகள் நாளை 8-ம் திகதியும். சங்கானை, தெல்லிப்பளை பகுதி ஆசிரியர் பயிலுநர் தொடர்பான விசாரணைகள் 9-ம் திகதியும் நடைபெறவுள்ளன

மேன் முறையீடு செய்தவர்கள் தமது முறைப்பாட்டிற்கு ஆதாரமான ஆவணங்களுடன் குறித்த திகதியில் யாழ்ப்பாண கல்வித் திணைக்களத்திற்கு சமூகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். இவ் விசாரணைக்கு மேன்முறையீடு செய்தவர்கள் சமுகம் தரத் தவறின், அவர்களின் மேன்முறையீடு பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

## தென்னங்கன்றுகள் அபேஸ்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு அரசினர்வைத்தியசாலைவளவில் நாட்டப்பட்டிருந்த தென்னங்கன்றுகள் நள்ளிரவு நேரம் மாயமாக மறைந்துள்ளது இச்சம்பவம் கடந்த செவ்வாய் இரவுநிகழ்ந்துள்ளது,

அரசினர் வைத்தியசாலைக்குள் இரவு நேரம் மதிலால் ஏறி உள்புகுந்த இனந்தெரியாத விஷமிகளால் அங்குநாட்டப்பட்டிருந்த பத்துக்கும் மேற்பட்ட தென்னங்கன்றுகள் களவாக கொண்டுசெல்லப்பட்டுள்ளன. (101)

# யாழ். மாவட்டத்தில்— எரிபொருள் பாவனை அதிகரிப்பு; தட்டுப்பாடு இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த மாதம் எரிபொருள் பாவனை அதிகரித்துள்ளதாக யாழ். மாவட்ட பெற்றோலியம் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது கடந்த மாதம் யாழ் மாவட்டத்தில் நாற்பது லட்சம் லீட்டர் பெற்றோல், நாற்பத்திரண்டு லட்சம் லீட்டர் டீசல், அறுபத்தைந்து லட்சம் மண்ணெண்ணை விற்பனை செய்யப்பட்டிருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்ட பெற்றோலிய கூட்டுத்தாபன களஞ்சியசாலையில் தற்போது போதிய அளவு பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் கையிருப்பில் உள்ளதாகவும், விற்பனையாளர்கள் கட்டுப்பாட்டு விலைக்கே விற்றுவருவதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போதைய கட்டுப்பாட்டு விலைகள்: பெற்றோல் லீட்டர் இருபது ரூபா ஐம்பது சதம். டீசல் லீட்டர் பத்து ரூபா எட்டுச் சதம். மண்ணெண்ணெய் லீட்டர் ஏழு ரூபா ஆறுசதம்.

ரயில் சேவை சீராக நடைபெறுவதால் எரிபொருள் தட்டுப்பாடின்றி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்படுவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (12)

# ஒரு அதிர்ச்சித் தகவல் இது! தனியார் காணிகளின் தாய் உறுதிகளை காணவில்லை!

## மேன்முறையீடு பரிசீலனையில்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணம்கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள தனியார் காணிகளுக்கான தாய் உறுதிகள் அனைத்தும் வன்செயல்களினுல் காணுமல் போயுள்ளதுடன் பல அழிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் நாற்பதாம் ஆண்டுக்கு முந்தியவையாகும்'' என்று யாழ்ப்பாண மாவட்டகாணிப் பதிவாளர் திரு ஜே என் போர்மன் 'ஈழநாடு'வுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தகவல் தருகையில்; ''எண்பத்தேழாம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் எண்பத்தெட்டாம் ஆண்டு பெப்ரவரிமாதம் வரை பழைய பூங்காவில் உள்ள தனியார் கட்டிடமொன்றில பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த அறுநூறு உறுதிகள காணுமல்போய்விட்டன. இவ் உறுதிகளைப்பற்றிய மேன்முறையீடு இப்போதுபரீசிலனை செய்யப்பட்டுவருகின்றது. இவ்வாண்டு பெப்ரவரி மாதம் மீண்டும் ஆரம்பமான காணி அலுவலகம் எண்பத்தேழாம் ஆண்டு, எண்பத்தெட்டாம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை எழுதப்பட்ட உறுதிகளைப் பதிவுசெய்து முடித்துள்ளது. இப்பணி ஊழியர்களின் கடின உழைப்பினுல்தான் முடிந்துள்ளது'' என்றுர்.

மார்ச் மாதம் பதினைந்தாம் திகதி முதல், எண்பத்தெட்டாம் ஆண்டு ஜூன், ஜூலை ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் எழுதப்பட்ட உறுதிகளை பதிவுசெய்யும் வேலை ஆரம்பமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

### தளபாடப் பற்றுக்குறை

''காணிச் செயலகத்தில்தளபாடப்பற்றுக்குறை பெரிதாகவுள்ளது. மூன்று அறைகளில் உறுதிகள் எடுக்கமுடியாதவாறு அடுக்கிவைக்கப்பட்டுள்ளன. ஊழியர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

காணிச் செயலகத்திற்கான கட்டிடம் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தை புதிதாக நிர்மாணிப்பதற்கு நாற்பத்து மூன்று லட்சம் ரூபா தேவைப்படுகிறது. இதற்கான நிதியை வழங்குகிறேம் என்ற உத்தரவாதத்தைக்கூட புனர்வாழ்வு அமைச்சு இதுவரை வழங்கவில்லை ஒருமாத காலத்தில் காணிதிணைக்களம் ஆயிரம் உறுதிகளைப் பதிவு செய்துள்ளது.

காணுமற் போன உறுதிகள் சம்பந்தமாக பதிவுசெய்யப்பட்டு காணுமல் போனது, பதிவு செய்யாமல் காணுமல் போனது என்று இரண்டு வகைகளில் முறையீடு செய்யப்பட வேண்டும். காணி உறுதிகளுக்கான கட்டணம் ஆயிரம் ரூபாய்க்கு முப்பது ரூபாயாகும்' என்று அவர் விளக்கினுர். [12]

# இயங்கமுடியாத நிலையில் ஆஸ்பத்திரி

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று ஆஸ்பத்திரி மீண்டும் திறக்கப்படுமா? 85-ம் ஆண்டு அக்கரைப்பற்றில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது ஆஸ்பத்திரி கட்டிடத்தில் பாதுகாப்புப் படையினர் முகாமிட்டிருந்தனர். இதனுல் ஆஸ்பத்திரி பழைய பிரசவ விடுதிக் கட்டிடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. இந்திய அமைதிப் படையினர் அக்கரைப்பற்றிலிருந்து வெளியேறியதும் ஆஸ்பத்திரியில் முகாமிட்டிருந்த பதுகாப்புப் படையும் வெளியேறியதும், உடனடியாக வைத்திய சுகாதாா திணைக்களத்தினர் பிரசவ விடுதியில் செயல் பட்டுக்கொண்டுவரும் ஆஸ்பத்திரியை மாற்றம் செய்யாது கைவிட்டிருந்தமையினுல் இனம் தெரியாதவர்கள் ஆஸ்பத்திரிக் கட்டிடத்திலுள்ள கதவுகள், ஜன்னல்கள், கூரை ஓடுகள், சீற், மின்சார உபகரணங்கள் போன்றவைகளை திருடியதோடு பெருமளவு சேதப்படுத்தியுள்ளார்கள். இதனுல் இந்த ஆஸ்பத்திரியை திருத்தி அமைப்பதற்கு பல லட்சம் ரூபா தேவையாக இருப்பதினுல் இப்போதைக்கு ஆஸ்பத்திரி மாற்றம் செய்யப்படுவது சாத்தியமாக இல்லை என்று சொல்லப்படுகிறது. (142)

# மானிய ஆணைக்குழுத் தலைவர் கிழக்கு பல்கலைக்கழகம் விஜயம்

(மட்டக்களப்பு)

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் ஏ.ரி. அலுவிகார அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு முதல்தடவையாக விஜயம் செய்தார்.

பல்கலைக் கழக மாணவர்கள், நிர்வாகிகள், ஊழியர்கள் ஆகியோரைச் சந்தித்து பிரச்சனைகளை கேட்டறிவதற்காகவே இவர் மட்டக்களப்பிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

பல்கலைக் கழகத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி பிரச்சனைகளுக்கு விரைவில் பரிகாரம் காணப்படும் என்று தெரிவித்தார்.

பல்கலைக்கழ மானிய ஆணைக்குழுவுக்கும் பல்கலைக் சழக கல்வி அணிசார ஊழியர் தொழிற்சங்க சம்மேளனத்திற்கும் இடையில் கடந்தவருடம் ஜூன் மாதம் 6ந் திகதி கைச் சாத்திடப்பட்ட ஒப்பந்தம் இதுவரை அமுல் செய்யப்படவில்லை.

இவ்வாறு கிழக்கு பல்கலைக்கழக கல்வி அணிசாரா ஊழியர் சங்கம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் ஏ.பி.ரி. அலுவிகாரவிடம் அண்மையில் கையளித்த மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்படி மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: ''வடகிழக்கு மாகாண அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 50 வீத ஊக்குவிப்பு அலவன்ஸ் இதுவரை வழங்கப்படவில்லை.

''பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படும் பயிற்சிநெறிகளை மேற் கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கான பாடநெறிக்கட்டணம் தொடர்பாக தங்கள் 415ம் இலக்க சுற்றறிக்கை மீளாய்வு செய்தல்.

''கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பதவி உயர்வு வழங்கப்படாதிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு ஆளணி திரட்டு வசதிகள் பெற்றுக் கொடுத்தல். (121)

# பனம்பொருள் அபிவிருத்தி சபையின் பாரிய திட்டங்கள்!

## பத்திரிகையாளர்மாநாட்டில் தலைவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

''ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்திடம் மூன்று அடிப்படை நோக்கங்களைக் கொண்ட ஒரு திட்டத்தை பனம்பொருள் அபிவிருத்திச் சபை சமர்ப்பித்துள்ளது. இது 24 மில்லியன் ரூபாவை அடிப்படையாகக் கொண்டது.

'ஒன்று வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களை ஊக்குவிப்பதாகும். இத் திட்டத்தின்கீழ் 65,000 மக்கள் உள்ளனர். இவர்களில் சீவல் தொழில், பாய் பின்னுதல் போன்ற தொழில் பார்ப்பவர்களும் அடங்குவர். இதைவிட 25.000 மக்கள் சிறுகைத்தொழில் அதாவது சுயதேவையை பூர்த்தி செய்பவர்களும் உள்ளனர். இத்திட்டம் பரந்த அளவிலான திட்டமாகும்.

''இரண்டாவது கைப்பணிப் பொருட்கள். இப்படியான பொருட்களை எந்தெந்த நாட்டுக்கு எந்தெந்த வடிவத்தில் செய்து ஏற்றுமதியை ஊக்குவிப்பது என்பதாகும்.

''மூன்றுவது மகளிர் குழுக்கள். வன்செயலால் பாதிக்கப்பட்ட மகளிரும், வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மாதர்களும் இதில் அடங்குவர்.''

இவ்வாறு யாழ். பனம் பொருள் அபிவிருத்திச் சபைக் கட்டடத்தில் நேற்று நண்பகல் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பனம் பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. க. நடராசா தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது: 'கள்ளிலிருந்து இதுவரை காலமும் சாராயம் செய்தோம் இப்போது பனம் பழத்திலிருந்து சாராயம் செயும் முறையைக் கண்டுபிடித்திருக்கிறேம் அண்மையில் எமது பனம் பழங்களை ஜேர்மனிக்கு அனுப்பி ஆராய்சி நடத்தி உலகத்தில் மிகச் சிறந்த பானங்களில் ஒன்று என்ற பெருமையைத் தேடியுள்ளோம்.

''கள் இறக்கி விற்பதிலும் பார்க்க பனஞ்சாறுதான் இலாபத்தைத் தரக்கூடியது. ஏழு வருடத்தில் ஆகக் குறைந்தது 25,000 மெற்றிக்தொன் பனஞ்சாறு பெற்றுக்கொள்ளலாம்.

''மிகவும் நவீன முறையில் பனையில் என்ன செய்யலாம் என்பதைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறுர்கள். பனைமரத்தைக் குட்டையாக வளர்ப்பது, புதிய இயந்திரங்களைக் கண்டுபிடிப்பது இவைகளில் அடங்கும்.

பத்திரிகையாளர் மாநாட்டில் பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் திரு ஆர். குகநேசன், செயலாளர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. வி. ஜி. தங்கவேலு ஆகியோரும் உடனிருந்தனர். (ம)

## அனுமதி அட்டை கிடைக்கவில்லை

[தென்மராட்சி]

இந்து கலாச்சார அமைச்சினுல் நடாத்தப்படும் இந்து சமயப் போட்டிக்கான அனுமதி அட்டைகள் யாழ் குடாநாட்டு இந்து இளைஞர்மன்றங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை,

இந்நிகழ்ச்சி எதிர்வரும் 10-ம் திகதி நடைபெறுமெனத் தெரியவருகிறது.

## இலவச வகுப்பு

(புங்குடுதீவு)

பாரதி சனசமூக நிலையத்தினரால் அப்பகுதியிலுள்ள சிறுர்களுக்கு கல்வி அறிவினைப் புகட்டும் நன்னேக்குடன் இலவச வகுப்பொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ், ஆங்கிலம், கணிதம், சமுகக்கல்வி உடற்கல்வி போன்ற மிக முக்கியமான பாடங்கள் அம்மாணவர்களுக்கு புட்டட்பட்டு வருகுறது.

ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை வகுப்புக்கள் நிலைய மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. (101)

# மத்திய அரசின்கட்டுப்பாட்டில் வடக்கு-கிழக்கு மாகாண அரச ஊழியர்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண அரச ஊழியர்கள் இனிமேல் மாகாணசபைமுதல்வரினதோ அமைச்சர்களினதோ உத்தரவுகளிற்கு கட்டுப்படத்தேவையில்லை என்று பொதுநிருவாக மாகாணசபை அமைச்சர் திரு. யு பி. விஜயக்கோன் தெரிவித்துள்ளார்.

ஈழ ஜனநாயக குடியரசாக வடக்கு-கிழக்கு மாகாணசபை ஒருதலைப்பட்சமாக மேற்கொண்ட பிரகடனத்தின் மூலம் அம்மாகாணசபை செயலிழந்துள்ளது எனவேமாகாணசபை அரசாங்க ஊழியர்கள் அனைவரும் மத்திய அரசாங்கத்தின் உத்தரவின் கீழ் இயங்க வேண்டும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் நிருவாகம் தற்போது செயலிழந்துள்ளபோதிலும் மாகாண அரசு நிர்வாகம் தொடர்ந்தும் இயங்கும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மாதகல் கடலில்

# கடற்படை வள்ளமும் தனியார் வள்ளமும் மோதிய விபத்தில் ஒருவர் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடலில் நேற்று முன் தினமிரவு கடற்படையினரின் வள்ளமும் தனியார் மீன்பிடி வள்ளமும் மோதுண்ட விபத்தொன்றில் வள்ளத்தில் இருந்தவர்களில் ஒருவர் பலமாகத் தாக்கப்பட்டார்.

வள்ள இயந்திரம், வலைகள், மீன்கள் என்பன கடலில் மூழ்கடிக்கப்பட்டன.

வள்ளத்தில் விபத்திற்குள்ளான இருவரில் ஒருவரான அகஸ்டீன் யோசப் வலன்ரைன் வயது (22) என்ற இளைஞர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, நேற்று முன் தினமிரவு கடலுக்குத் தொழில் செய்வதற்காகச் சென்ற இருவர் தொழிலை முடித்துக்கொண்டு நேற்றுப் பகல் 2 மணியளவில் கரைக்குத் திரும்பி வருகையில் எதிராகக் கடற்படையினரின் ஒரு இயந்திர வள்ளம் வருவதைப் பார்த்துத் தமது வள்ளத்தை நிறுத்தியதாகவும், நிறுத்திய வள்ளத்தை நோக்கி வந்த கடற்படையினரின் வள்ளம் அதை வேகமாக மோதியதாகவும், மோதியவுடன் தமது வள்ளம் அவ்விடத்திலேயே கவிழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது.

வள்ளம் கவிழ்ந்த போது வள்ளத்திலிருந்த 36,500 ரூபா பெறுமதியான இயந்திரம், 35,000 ரூபா பெறுமதியான வலைகள், 3,000 ரூபா பெறுமதியான பிடிபட்ட மீன்கள் என மொத்தம் 74,500 ரூபா பெறுமதியான பொருள்கள் கடலில் மூழ்கடிக்கப்பட்டனவாம்.

இயந்திரமற்ற வள்ளம் கடற்படையினரால் கரையில் கொண்டுவந்து விடப்பட்டுள்ளது. (56)

# புலிகள் - ஜனாதிபதி பேச்சுக்களால் வடக்கு - கிழக்கில் சுமுகநிலை! - பாராளுமன்றில் ஈரோஸ் எம். பி.

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஜனாதிபதி திரு. பிரேமதாசா மேற்கொண்டு வரும் பேச்சுவார்த்தைகளின் பயனாக வடக்கு-கிழக்கில் இன்று சுமுகநிலை தோன்றி வருகிறதுஎன்று ஈழவர் ஜனநாயக முன்னணி உறுப்பினர் திரு. வி. பரராஜசிங்கம் நேற்றுபாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குமாகாணசபை ஈழஜனநாயக குடியரசாக' பிரகடனப்படுத்தப்பட்டது தொடர்பாக நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்:

சுமார் 35 லட்சம் தமிழ் மக்களின்பிரச்னைபேச்சுவார்த்தைகளின் மூலமே தீர்க்கப்பட வேண்டும். அண்மையில் வடக்கு-கிழக்கு முதல்வர்மேற்கொண்ட ஒரு தலைப்பட்சமான பிரகடனம் கண்டிக்கப்படவேண்டிய ஒரு செயலாகும் என்றும் கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. திரு. திவ்யநாதன் (ரெலோ) உரையாற்றுகையில்; நாடு அரசியல் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் இவ்வேளையில் தனி ராஜ்யம் உசிதமானதல்ல என்று கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி திரு. யோகசங்கரி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) உரையாற்றுகையில்; திரு. பெருமாள் எடுத்த நடவடிக்கை ஸ்திரப்படுத்தப்பட்டால் தமிழர்களுக்கு எந்தவிதமான பிரச்னையும் இருக்கமாட்டாது.

இதற்கு முன் பதவியிலிருந்த எல்லா அரசாங்கங்களும் அவற்றின் வாக்குறுதிகளைக் கௌவரவிக்கவில்லை என்றும் கூறினார். [சி)

## பனங்கட்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- பனையபிவிருத்திச் சபையின் திக்கம் வடிசாலை இருபது லட்ச ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. இது அதன் உற்பத்தியை இம்மாதம் ஒன்பதாம் திகதி ஆரம்பிக்கும். இங்கு உற்பத்திசெய்யப்படும் பனம் சாராயம் ''கோல்ட் சேர்க்கிள்'' என்ற பெயரில் ஜூன் மாதம் சந்தைக்கு விடப்படும்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் பனம் சாராயம் இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் ஏனைய சாராயங்களிலிருந்தும் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் தன்மையற்றது என்பதை ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன.

சாராய உற்பத்தி ஆரம்பமாவதால் நீண்டகாலமாக தேவையற்றதென ஊற்றப்பட்ட பனங்கள் முழுவதும் சாராயமாக மாற்றப்படும். இதனால் பனையை நம்பி வாழும் ஒரு லட்சம் குடும்பங்கள் நன்மையடையும்.

பனை அபிவிருத்திச்சபையின் நடவடிக்கைகளுக்கு சீடா நிறுவனமும், ஐக்கிய நாடுகள் உணவு ஸ்தாபனமும் பெருமளவு நிதியுதவி வழங்கியுள்ளன.

இவ்விரு ஸ்தாபனங்கள் இதற்கான திட்டத்தை அங்கீகரித்ததன் மூலம் தமிழ்மக்களின் பொருளாதார வளங்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளன.

இத்திட்டத்தின்படி ஆராய்சித் துறைகளை மேற்கொள்ள இந்திய, இந்தோனேசிய தாய்லாந்து ஆய்வாளர்கள் இலங்கைக்கு வரவுள்ளனர்.

பனை அபிவிருத்திச் சபையின் பணிமனை உடனடியாக வீடமைப்புத் திணைக்களக் கட்டடத்திற்கு மாற்றப்படும். சபையின் நிர்வாகக் குழுக்கூட்டங்கள் இனிமேல் யாழ்ப்பாணத்தில்தான் நடைபெறும் என்றார். (12)

## கர்ப்பிணிப் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு காரணமாக நான்கு மாத இளம் கர்ப்பிணி பெண் ஒருவர் தன்னைத் தானே தீ மூட்டி தற்கொலை செய்துகொண்டார்,

யாழ்ப்பாணம், பொம்மை வெளியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஜெஸீமா அஸ்கார் (வயது 19) என்ற இளம் பெண்ணே தற்கொலை புரிந்தவராவார்.

மரண விசாரணையின்போது இறந்தவரின் தாயார் சாட்சியமளிக்கையில் இவர் திருமணமாகி நான்கு மாதங்கள் தான் என்றும், குடும்பத்தில் சிறு சிறு சச்சரவுகள் வந்ததென வும், சம்பவதினம் கணவனை அறையில் பூட்டிவிட்டு தானே தனககு தீ முட்டினார் என்று தெரிவித்ததாகவும் கூறினர். கடந்த முதலாந்திகதி தீக்காயங்களுக்குள்ளான இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு நேற்றுக் காலைமரணமானார். விசாரணை முடிவில் சடலம் கணவனிடம் ஒப்படைக்கப்பட்டது. (56)

## பயிலுநர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லிப்பழை, பத்தாம் திகதி நல்லூர், பதினோராம் திகதி நல்லூர், யாழ்ப்பாணம், பன்னிரண்டாம் திகதி பருத்தித்துறை, பதினமூன்றும் திகதி உடுவில், பதினாலாம் திகதி கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குமென மேன்முறையீட்டு விசாரணைகள் நடைபெறும். (12)

## இன்று நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட முறைசாரக் கல்வித்திட்டத்தின் கீழ்பயிற்சி நெறிகளுக்கு புதிதாக விண்ணம்பம் செய்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை இன்று முதல் (புதன்கிழமை) பதினோராம் திகதிவரை யாழ்ப்பாணக் கல்வித்திணைக்கள முறைசாரா கல்விப்பிரிவில் நடைபெறும்.

இப்பயிற்சி நெறிகளுக்கு இதுவரை ஒன்பதினாயிரத்தி எண்ணூற்றி நாற்பத்திநெட்டுப்பேர் விண்ணப்பித்துள்ளனர். (12)

# தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் எண்ணிக்கை: 9,921

(கொழும்பு)

நாட்டிலுள்ள பல்வேறு பாதுகாப்பு முகாம்களிலும், புனர்வாழ்வுமுகாம்களிலும் மொத்தம் 9,921 பேர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. கடந்த நான்காம் திகதி வரையில் மேற்கொண்ட கணக்கெடுப்பின்படி மேற்படி தொகையினர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளையில் சரணடைந்துள்ள 3,986 பேர் புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்னர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் பற்றிய எண்ணிக்கை விபரம் வருமாறு:

பூஸா: 2,360, வெலிசற: 57, பல்லேகல 590, பூனானை: 590, பெலவத்த: 1000, பாதுகாப்புப்படை. பொலிஸார் பாதுகாப்பில் 4,224, சிறைச்சாலை பாதுகாப்பில்: 428.

சரணடைந்தவர்களும், புனர்வாழ்வு திட்டத்தின்கீழ் வைக்கப்பட்டவர்களும் 3986 பேர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81. Eelanadu P. O. Box No. 49. Telegram; Eelanadu. Telephone: 2291.

## புதிய தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தங்கள் தயார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தேர்தல் பணியகம் புதிய தேர்தலொன்றை நடத்த எந்நேரமும் தயாராக இருப்பதாக யாழ். மாவட்ட தேர்தல் பணியக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாக்காளர் இடாப்புக்கள் கடந்த ஆண்டுப் பதிவின்படி சரிசெய்யப்பட்டுத் தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் பணியகம் இப்போது செயலகக் கட்டிடத்திலே இயங்குகின்றது. (12)

## சர்வதேச பெண்கள் தினம்: கைலாசபதி அரங்கில் நாளை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகம் நடாத்தும் சர்வதேச பெண்கள் தினம் நாளைக்காலை வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு மறுமலர்ச்சிக் கழக தலைவர் திரு. வே. அருணேதயம் தலைமை தாங்குவார்.

கருத்தரங்கிற்கு கலாநிதி என். சுப்பிரமணிய ஐயர் தலைமைவகிப்பார் கருத்தரங்கும் சர்வதேச அரங்கில் பெண்கள் பங்கு பற்றி செல்வி சி. மீராவும், பெண்விடுதலை எப்போது சாத்தியமாகும் பற்றி திருமதி அம்மன்கிளி முருகதாசும் பாரதியும் பெண் விடுதலையும் பற்றி திரு. இ. ஜெயராஜும், பெண்களின் மீதான சமுதாய அழுத்தம் பற்றி திருமதி கோகிலா மகேந்திரனும் வாதிடுவர்

பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் என்ற தலைப்பிலான கவியரங்கிற்கு திரு. சோ பத்மநாதன் தலைமை தாங்குவார். கவிதைகளை. செல்விகள் ச. நித்தியலட்சுமி, து. சைலஜா, க. நாகபூசணி. நா. விமலாம்பிகை ஆகியோர் பாடுவர். (12)

## ஈ. பி. ஆர். எல். எவ்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தைக் கேலிக்கூத்தாக்கும் ஒரு செயலாகும்.

ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல். எவ். அமைப்புக்கள் வெளிநாட்டுச் சக்திகளின் கைப்பொம்மையாக இருப்பதுடன் எமது மக்களின் நலனில் அக்கறையில்லாதவர்களாகவும் இருக்கின்றன.

இவ்விரு அமைப்புக்களும் எமது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளே அல்ல அத்துடன் இத்தகைய பிரகடனம செய்வதற்கு மக்களிடமிருந்து ஆணையைப் பெற்றவர்களுமல்லர் இவர் ள்.

## சுதந்திர

(1ம பக்கத் தொடர்ச்சி)

வர் வரதர் முயற்சி செய்ய வேண்டும்.

இந்தியா ஒருபோதும் ஈழம் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

இலங்கையின் ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் இந்தியா முழுமையாக ஆதரிக்கிறது.

இந்த தெளிவான கொள்கைக்கு அமைய இந்தியா எந்தவிதமான ஈழக் கோரிக்கையையும் ஆதரிக்க மாட்டாது.

நாம் இலங்கை அரசுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றோம்.

இம்மாதம் 31-ம் திகதியளவில இலங்கையிலுள்ள அமைதிப்படையினர் முழுமையாக வெளியேறுவார்கள். (து)

## இருபூக்கிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யேறிவிட்ட பின்னர் தமக்கு என்ன நேருமோ என்ற அச்சம் காரணமாகவே இவர்களும் இவர்களுடன் சேர்ந்த நூற்றுக்கணக்கானோரும் இந்தியாவுக்குப் போக விருப்பதாகவும் தற்போது இவர்கள் தற்காலிகமாக சீனன்குடாவில் தங்கியுள்ளனர் என்றும் தெரிகிறது.

இதுவரையில் மூவாயிரத்துக்கும் அதிகமான ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட இலங்கையர்கள் தென்னிந்தியாவில் அகதிகளாகப் போய்ச் சேர்ந்துள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## தமிழ் ஈழ

(1ம பக்கத் தொடர்ச்சி)

ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்தன தமிழீழ அரசின் எல்லைக்குள் பிரவேசிப்பதாயின் சுங்க பரிசோதனைக்கு உட்பட வேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் திரு. அ. வரதராஜ பெருமாள் தெரிவித்தமைக்கு என்ன பதில் நீங்கள் கூறவிருக்கின்றீர்கள் என்று பத்திரிகையாளர்கள் அவரை வினவியபோதே அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன மேற்கண்டவாறு பதிலளித்தார். (அ)

## மரண அறிவித்தல்

### திருமதி தருமலிங்கம்-இராசம்மா

சரவணை மேற்கைச் சேர்ந்த திருமதி தருமலிங்கம் இராசம்மா காலமாகி விட்டார். இவர் இளைப்பாறிய தபால் சேவகர் திரு. தருமலிங்கத்தின் அன்பு மனைவியும், கொழும்பு, ஆறுமுகம், தம்பதிகளின் இளைய மகளாரும், திருமதி பாலசிங்கம் நகுலாம்பிகை திருமதி குருசாமி சுந்தரம்மா (கொழும்பு எல்.பி. ரி.ஸ்ரோஸ், உரிமையாளர்) திரு. பேரம்பலம் அவர்களின் சகோதரியும், திரு. சத்தியதாசன் (ஆசிரியர் சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாசாலை), சிவசக்தி, புஸ்பகாந்தன், உமாகாந்தா, சிவகுமார், லிங்கேஸ்வரி. இராசேஸ்வரி. இரத்தினேஸ்வரி, விக்கினேஸ்வரி, மணிவண்ணன், தேவதாஸ் ஆகியோரின் தாயாரும், இந்திரா, பரமேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும். பாலசிங்கம். குருசாமி, சௌந்தரநாயகி ஆகியோரின் மைத்துனியும. செந்தூரன், காயத்திரி, பிரியதர்சினி, கஸ்தூரி, கார்த்திக் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 7-3-90 பிற்பகல் 2-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுபொன்னங்கண்டிமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தகவல்: த. சத்தியதாசன் (மகன்)

சரவணை-மேற்கு

வேலணை.

[சி-3657)